GOKULAM

மே 2010 ▪ 80 பக்கங்கள் ▪ விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



நல்லதே சொல்லும் நடனம்!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1576


1577


1578


1579


1580


1581


1582


1583


1584


1585


1586


1587


1588


1589


1590


1591


1592


1593


1594


1595


1596


1597


1598


1599


1600

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கல்கி நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

மே 2010 மலர் : 28 இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

டியர் குட்டீஸ்,

விடுமுறையின் உற்சாகம் உங்களை மகிழ்ச்சிப் படுத்திக் கொண்டிருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில், ஏதாவது வெளியூர்ப் பயணம் அமைந்தால், அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எப்படி?

ஒரு சின்ன உதாரணம்:

நீங்கள் தஞ்சாவூர் செல்கிறீர்கள் என்றால், அங்குள்ள பெரிய கோவிலைப் பாருங்கள். அது, ராஜராஜன் என்ற மாமன்னனின் பெருமையை உணர்த்திக் கொண்டிருக்கும் சாட்சி!

அந்தக் கட்டடக்கலை - கருவறை மீது உயரமான விமானம் எழுப்பும் முறை, தென்னிந்தியக் கோவில் அமைப்பில் இங்குதான் முதன் முதலில் ஆரம்பித்தது; அந்த ஊரின் பெயர் தண்+செய்+ஊர் = தண்செய்யூர். அதாவது 'குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த பகுதி!' அதுதான் 'தஞ்சாவூர்' என்று மருவியுள்ளது.

இப்படி ஒவ்வொரு ஊருக்கும் ஒரு அழகான விஷயம் இருக்கும். அதற்கு ஒரு வரலாறும், தனித்தன்மையும் இருக்கும். எந்த ஊருக்கும் போகவில்லையா? பரவாயில்லை.

உங்கள் ஊரைப் பற்றியே இப்படி விரிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். தெரிந்து என்ன செய்ய வேண்டும்? இருக்கவே இருக்கிறது, உங்கள் கோகுலத்தின் 'டைஜஸ்ட்' பகுதி!

எழுதி அனுப்புங்களேன் 'எங்கள் ஊர்' என்று. உங்களையும், உங்கள் ஊரையும் மற்றவர்களும் அறிந்து கொள்வதற்கு! செய்யலாம்தானே! பெருமையாக இருக்குமே!

அன்புடன்,
கோகூ







விட்டுக் கொடு!

என் தங்கைக்காக எதையும் செய்வேன் என்று பலரும் என்னைப் பாராட்டுவார்கள். ஆனால், அப்படி என்னை மாற்றியமைத்தவள் என் தங்கைதான். அது, எனக்கு ஆறு வயதிருக்கும்போது நடந்த சம்பவம்!

அன்று, என் தங்கையின் பிறந்த நாள்! வீடு அமர்க்களப்பட்டது. தங்கை பெயர் எழுதிய கேக் வந்துவிட்டது. அதைப் பார்த்த நான், 'எனக்கும் ஒரு கேக் வேண்டும். நான்தான் கேக் கட் செய்வேன்' என்று அடம் பிடிக்க ஆரம்பித்தேன். யார் சொல்லியும் கேட்கவில்லை. உடனே என் அப்பா, இன்னொரு கேக் வாங்கக் கிளம்பிவிட்டார். அப்போது, என் இரண்டரை வயது குட்டித் தங்கை சொன்னாள் :

"அண்ணா, நீ கேக் கட் பண்ணு. ஹேப்பி பர்த்டே பாடலாம்!"

அந்த வினாடியில் என் சந்தோஷம் கட்டுக்கு அடங்கவில்லை. எல்லாரும் பாட, கேக்கை வெட்டினேன். நாட்கள் செல்லச் செல்ல, தங்கை விட்டுக் கொடுத்த நிகழ்ச்சி மனத்தில் ஆழமாகப் பதிந்தது. இன்று, என்னுடைய விட்டுக் கொடுக்கும் குணத்துக்காகப் பலரும் பாராட்டுகிறார்கள். மற்றவர்கள் சந்தோஷப்படும் பொருட்டு, இன்று விட்டுக் கொடுக்கும் போதெல்லாம் எனக்கு இந்த நினைவுதான் மேலோங்கி நிற்கிறது.

- டி.எம்.சுரேந்தர், உ என் 35, திண்டுக்கல்

உயிர்களிடத்தில் அன்பு...

பள்ளியில் பெற்றோர், ஆசிரியர் சந்திப்பு.

அதற்காகப் பெற்றோருடன் வண்டியில் சென்று கொண்டிருந்தேன். அப்போது

ஒரு பூனைக்குட்டி சாலையைக் கடக்க முன்னே வருவதும், பின் வாங்கி ஓடுவதுமாக இருந்தது. காரணம், அடுத்தடுத்து வாகனங்கள் வந்து கொண்டேயிருந்தன.

சாலையின், மறுபுறம் அதன் தாய்ப்பூனை நின்றபடி குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. அதனருகே இன்னும் சில குட்டிகள் இருந்தன. சாலையைக் கடக்க தாய்ப் பூனை முயன்றால், குட்டிகளும் பின்னே ஓடி வந்தன. அதனால், சாலையைக் கடக்க முடியாமல், மறுபுறத்தில் நின்றபடியே மறுகிக் கொண்டிருந்தது தாய்ப் பூனை. அதைப் பார்த்ததும், தந்தையிடம் ஒரு நிமிடம் வண்டியை நிறுத்தும்படிக் கூறினேன். கீழே இறங்கி, அந்தப் பூனைக் குட்டியை தூக்கிக் கொண்டு சாலையைக் கடந்தேன். மறுபுறம் இருந்த தாய்ப்பூனை என்னை மிரட்சியுடன் பார்த்தது. குட்டியை அதனருகே



இறக்கிவிட்டவுடன், வேகமாக வந்து தன் குட்டியை நீவியது. குட்டியும் மியாவ் என்றபடியே புல்தரையில் உருண்டு புரண்டது. அந்த உற்சாக விளையாட்டு, இப்போதும்கூட என் மனத்தில் சந்தோஷ நதியாகப் பெருகி ஓடுகிறது.

- **அதிபன் அன்புமணி,**
உ. எண் 120, ஈரோடு

கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

ப்ரியன்

கவர் ஸ்டோரி



* ஒத்திகையில் ரமணி வெங்கடேசன்

நாட்டியத்துக்கே உரிய ஆடைகளை அணிந்து, வளைந்து வளைந்து ஆடுகிறார்கள் அந்தச் சிறுமிகள்! விதவிதமான பாவங்களை உணர்த்தும் முகங்கள்; அபிநயங்கள்... என்று ஆச்சரிய அமர்க்களம்! இவர்கள், சென்னை அம்பத்தூரில் உள்ள 'காஞ்சி காமகோடி நாட்டியாலயா'வைச் சேர்ந்தவர்கள். அனைவருமே, ஆறு முதல் பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறுமிகள். இதை நடத்துபவர் நாட்டியக் கலைஞரான ரமணி வெங்கடேசன். அதிகபட்சமாக, திருப்புகழ் அடிப்படையிலேயே நாட்டிய நாடகங்கள் அமைக்கிறார் இவர். ஏன்? சிறுமிகளை வைத்து இவற்றை நடத்த வேண்டிய அவசியம் என்ன?

ரமணியின் அம்மா ருக்மணிக்கு திருப்புகழின் மீது அவ்வளவு ஈடுபாடு. "தமிழில் சந்தம் மிகுந்த பாடல்கள் பல உண்டு. என்றாலும், திருப்புகழில் அது ஏராளம்! தவிர, அருணகிரிநாதர் அதில் சொல்லாத விஷயங்களில்லை. முருகனின் திருப்புகழைப் பாடி, அதன் புகழைப் பரப்புவதற்காகவே 1980-களில் திருப்புகழ் பஜனை மண்டலியைத் துவக்கினோம்" என்று ருக்மணி சொல்லி நிறுத்த, ரமணி தொடர்கிறார்.

"1989-ம் ஆண்டு ஆடி அமாவாசை

நல்லதே சொல்லும் நடனம்!



தினம். காஞ்சி மகா பெரியவர் கலவையில் முகா மிட்டிருந்தார். நாங்கள் பாடி முடித்ததும் வாத்தியங்களை மூட்டை கட்டிக் கொண்டு கிளம்ப யத்தனித்தோம். 'இரு' என்று கை காட்டினார் பெரியவர். மடத்து மானேஜரைக் கூப்பிட்டு அவரிடம் ஏதோ சொன்னார். சிறிது நேரத்துக்குப் பிறகு அவர் அம்மாவிடம் வந்தார். "திருப்புகழை மட்டுமல்லாமல், பன்னிருதிருமுறை, பிர பந்தம், ராமாயணம், பாரதம் மற்றும் புராணங்களை நமது குழந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு இசை மற்றும் நாட்டியம் நல்ல வாய்ப்பு. அப்போதுதான் குழந்தைகள் மனத்தில் பதியும். அதில் சொல்லப்பட்ட நல்ல பண்புகளின் அடிப்படையில் அவர்கள் வாழ்வு அமையும். அடுத்த தலைமுறைக்கும் குழந்தைகள் அவற்றைக் கொண்டு செல்வார்கள். ரம ணிக்கு நாட்டியம் தெரியுமாத லால், அவள் இதுபோன்ற ஆன் மிகப் பொக்கிஷங்களை நாட்டிய நாடகமாக நடத்தலாமே என்பது பெரியவா அபிப்ராயம்!" என்று முடித்தார் மானேஜர்.

அதை வேதவாக்காக ஏற்றுக் கிளம்பினோம். அப்போதுதான், 'காஞ்சி காமகோடி நாட்டியாலயா' உருவானது. 'முதல் நாடகமாக எதைப் போடுவது?' என்று முதலில் சின்ன குழப்பம் இருந்தது. "திருப்புகழ் கையிலிருக்க, பயமென்ன என்ற அதை வைத்து 'அறுபடை வீடு' என்று நாடகம் உருவானது. முதல் நாடகம் சென்னை கந்த கோட்டத்தில். சிறுமிகளின் ஆடலையும் நடிப்பையும் பார்த்து வியந்து போனார்கள் பக்தர்கள். விஷயம் தமிழக மெங்கும் பரவியது. ஆங்காங்கே பக்தர்

களிடமிருந்து 'எங்கள் ஊருக்கு வாருங்கள்' என்று அழைப்பு மேல் அழைப்பு. "அடுத்தது எதை வைத்து நாடகம்?" என்று பலரிடமிருந்து விசாரிப்புகள் தொடர்ந்தன.

"அதன்பின், திருப்புகழ் நவரசம், திருப்புகழ் கண்ட சமுதாயம்" என்றெல்லாம் நாட்டிய நாடகம் போட்டோம். தனி மனித ஒழுக்கத்துக்கு நிறையவே வழிகாட்டியிருக்கிறார் அருணகிரிநாதர். பன்னிரு திருமுறையை மிக எளிய வடிவில் கொடுத்தோம். சேக்கிழாரின் பெரிய புராணம், மகாபாரதம், ராமாயணம், திருக்குறள் கருத்துக்கள், பாரதியின் பாடல்கள் ஆகியவற்றையும் நாட்டிய வடிவமாகக் கொடுத்ததில் நல்ல வரவேற்பு. ஆன்மிக அன்பர்களால் மிகவும் ரசிக்கப்பட்டது தசாவதாரம்" என்கிறார் ரமணி. கோயில் திருவிழாக்கள், ஆன்மிக மாநாடுகள், ஏன் கல்யாண வரவேற்பில்கூட இவர்களின் நாட்டிய நாடகங்கள் நடக்கின்றன.



இதிகாச, புராணங்களைச் சொல்லி நம் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளை வளர்க்க இசை மற்றும் நாட்டியம் நல்ல வாய்ப்பு!

முதலில் நாடகத்துக்கான கருப் பொருளைத் தீர்மானம் செய்த பின், நடிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுமிகளை அழைத்து, புராணக் கதையையும் பாடல்களின் பொருளையும் அவர்களுக்கு விளக்குகிறார் ரமணி. ஒவ்வொரு சிறுமிக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் வேடத்தையும் விளக்கி அந்த வேடம் வெளிப்படுத்தும் நல்ல பண்புகளையும் விளக்குகிறார். "இப்படிச் செய்வதன் மூலம் நல்ல, ஒழுக்கமான வாழ்க்கைக்கான விதை அவர்கள் மனத்தில் ஊன்றப்பட்டு விடுகிறது. அவர்களும் கேரக்டரைப் புரிந்து கொண்டு, நடிப்பதற்கு உதவியாக இருக்கிறது. நமது பாரம்பரியப் பெருமைகளும் உணர்த்தப்படுகின்றன."

நாட்டிய நாடக ஒத்திகைகளை மூத்த மாணவிகளான தேவிகா, சாருலதா, நாகராணி, சுபஸ்ரீ போன்றோர் பார்த்துக் கொள்கிறார்கள். இவர்கள் நாடகங்களில் பாடுவது பத்தாவது படிக்கும் ஸ்ரீநிவாசராகவன். ஒரு கேரக்டருக்கு தேவையான வேல், சூலாயுதம், கதை போன்றவற்றைச் சிறுமிகளே தயார் செய்யவும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

புதுதில்லி மற்றும் இந்தியாவின் முக்கிய நகரங்களைத் தவிர, மலேசியாவிலும் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள் இந்தக் குழுவினர். இவர்கள் குழுவில் 250 சிறுமிகள் இருக்கிறார்கள்.

"நமது தொலைக்காட்சிகள் சிறுவர், சிறுமிகளை வைத்து அவர்களது வயதுக்கு மிஞ்சிய ரசனைக் குறைவான பாடல்களைப் பாட வைத்தும் ஆட வைத்தும், தவறான சிந்தனையை வளர்க்கின்றன. இந்தச் சூழலில், இதுபோன்ற நாட்டிய நாடகங்களில் நடிக்க வைப்பதன் மூலம், நல்ல பண்புகளை குழந்தைகளின் மனத்தில் ஆழமாகப் பதிய வைப்பது, என் வாழ்வில் முழு நிறைவைக் கொடுக்கிறது" எனச் சொல்கிறார் ரமணி.

படங்கள் : ஸ்ரீஹரி

நல்ல நாள்!

கதை :
ஹ.பா.முஸ்டாக் சமீர்,
உ.எண் 1548, கடலூர்
படம் : பிள்ளை



விளையாட்டு

ஐபிஎல் ஏலம் மூன்று வருடத்துக்கு ஒருமுறை நடக்கிறது. அடுத்த மூன்று வருடத்துக்கான ஏலம், வருகிற செப்டம்பர் மாதம் நடக்க உள்ளது. இதில் பல வீரர்கள் வேறு அணிகளுக்கு மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை அணிக்கு மீண்டும் தோனியே தலைமை தாங்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஹேடன், ரெய்னா, முரளி ஆகியோரும் சென்னை அணியிலேயே நீடிக்கக்கூடும்.

2010 ஐபிஎல்-ன் இரண்டு சூப்பர் ஸ்டார்கள், சச்சின் மற்றும் காலிஸ். இதில் காலிஸ் 2007ல் நடந்த 20-20 உலகக்கோப்பைக்குத் தேர்வாகாதவர். 20-20 அணிக்கு லாயக்கற்றவர் என்று முத்திரை குத்தப்பட்டவர்தான் இன்று அதே 20-20யில் அபாரமாக ஆடியிருக்கிறார்.

ஐபிஎல் வரலாற்றில் அதிகச் சம்பளம் வாங்கியவர் தோனி. ஆறரை கோடி அவருடைய சம்பளம். ஆனால் அடுத்த வருடமே ஏழரை கோடிக்கு விலை பேசப்பட்டார்கள் ஃபிளிண்டாஃப்பும் பீட்டர்சனும். இந்த வருடம் 12 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டவர் பொலார்ட். அடுத்த ஏலத்தில் இந்தத் தொகை இன்னும் அதிகமாகப்போகிறது.

ஐபிஎல்-ல் சிறப்பாக ஆடி இந்திய அணிக்குள் நுழைந்த முதல் வீரர் யூசுஃப் பதான். இன்றைக்கும் ராஜஸ்தான் அணியின் சிறந்த வீரர் அவர்தான். ஷேன் வார்னுக்குப் பிறகு ராஜஸ்தான் அணியின் கேப்டனாக அவர் நிய

ஐ.பி.எல். அட்டகாசம்!



* முரளிதரன்

* பொலார்ட்

* சுரேஷ் ரெய்னா, தோனி

ச.ந.கண்ணன்

மிக்கப்படுவார்.

இந்த வருடம் ஐபிஎல் மூலமாக வெளியே தெரிந்த இன்னொரு நட்சத்திரம், முரளி விஜய். டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டுமே லாயக்கானவர் என்கிற முத்திரையை இப்போது உடைத்திருக்கிறார். முரளி விஜய்யின் ஆட்டத்தைப் பார்த்த கிரிக்கெட் விமரிசகர்கள், 'முரளி விஜய் கிரிக்கெட்டின் எல்லா வகையான ஆட்டங்களிலும் நிச்சயம் இடம்பெறவேண்டும்' என்று குரல் கொடுத்திருக்கிறார்கள்.

20-20 ஆரம்பிக்கப்பட்டபோது ஸ்பின்னர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த வருடம் ஐபிஎல்-லில் அதிக விக்கெட்டுகள் எடுத்து குறைவான ரன்கள் வழங்கியவர்கள் ஸ்பின்னர்கள்தான். ஓஜா, மிஸ்ரா, அஸ்வின், ஜகாதி, முரளிதரன், கும்ப்ளே, முரளி கார்த்திக் என்று அத்தனை பேரும் அபாரமாகப் பந்துவீசினார்கள்.



* முரளி விஜய்



ப்ரக்யான் ஓஜா



* அமித் மிஸ்ரா

சிறுகதை

வயிற்று வலி!

டி. ஜானகி

வகுப்பினுள் நுழைந்த கணக்கு ஆசிரியரைப் பார்த்தவுடனே கதிகலங்கியது கதிர்வேலுக்கு. சனி, ஞாயிறு இரண்டு நாட்களும் நேரம் போனது தெரியாமல் விளையாடிப் பொழுது போனது. அதனால், வீட்டுக் கணக்கு செய்ய மறந்து விட்டான். பள்ளிக்குள் நுழைந்த பிறகுதான் ஞாபகம் வந்தது.

என்ன செய்வது?

கணக்காசிரியர் சுந்தரலிங்கம் மிகவும் கண்டிப்பானவர். கற்றுக் கொடுப்பதில் எவ்வளவு அழகும் பொறுமையும் உண்டோ, அவ்வளவுக்குக் கோபம் வரும். அதுவும் வீட்டுக் கணக்கு செய்யவில்லை என்றால், வார்த்தைகளாலேயே விளாசிவிடுவார். போனவாரம் குமரனைப் பின்னி எடுத்து விட்டார். இத்தனைக்கும் குமரன் வகுப்பில் முதல் மாணவன். 'மறந்துட்டேன் சார்; இனி இப்படிச் செய்யமாட்டேன் சார்' என்று அழுத குமரனை வகுப்பை விட்டு வெளியே அனுப்பிவிட்டார்!

"எதுக்காக அழறே? வீட்டுக் கணக்கை செய்யாததுக்கு இப்ப தண்டிக்கலை. 'மறந்தேன்'னு சொன்ன பாரு. அதுக்குத்தான் தண்டனை. உன் வேலை, இப்ப படிக்கறதும் எழுதறதும்தான். நீ என்ன வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிறியா? துணி துவைக்கிறியா? சமைக்கிறியா? வீட்டு வேலை எல்லாம் நீதான் பார்க்கிறியா? இதையெல்லாம் உன் அம்மாவும், அப்பாவும் செய்யறாங்க. உன் வேலை இதில்லாம வேற என்ன? அதுல அக்கறை இல்லேன்னாத்தான் மறக்கும்."

சொன்னவாறே பல்லைக் கடித்தார் சுந்தரலிங்கம். வெலவெலத்துப் போனார்கள் அனைவரும். இப்போது நினைக்கும் போதும் உதறல் எடுத்தது கதிர்வேலுக்கு. 'என்ன செய்யலாம்?' யோசிக்கும்போதே, 'யார்டா ஹோம் வொர்க் பண்ணலை!' கணீரென்று ஆசிரியரின் குரல் எழுந்தது.

கதிர்வேல் வயிற்றைப் பிடித்துக் கொண்டு நின்றான். "சார்... நான் ஹோம் வொர்க் பண்ணிட்டேன். ஆனா, தவறுதலா பழைய நோட்டை எடுத்துட்டு வந்துட்டேன் சார்."

"ஏண்டா வயித்தைப் பிடிச்சுட்டு நிக்கறே?"

"காலைல இருந்து வயித்து வலி சார். எதுவும் சாப்பிடலை..."


சுருண்டு விழுவது போல நின்றான் கதிர்வேல். ஒரு நிமிடம் அவனை உற்றுப் பார்த்த சுந்தரலிங்கம், "சரி உட்கார்," என்றார்.

உயிர் திரும்பியது அவனுக்கு. 'அப்பாடா தப்பித்தோம்' என்று மூச்சுவிட்டான்.

மதிய உணவு இடைவேளை!

சத்துணவுக்காக வரிசையில் இருந்த கதிர்வேலை கூப்பிட்டனுப்பினார் சுந்தர லிங்கம். பயத்தில் பசி மரத்துப் போனது அவனுக்கு.

"நான் பொய் சொன்னது தெரிந்து விட்டதா? அடிக்கப் போகிறாரா? வீட்டுக்கு அனுப்பி நோட்டை எடுத்து வரச் சொல்வாரா?" கேள்வியும், பயமுமாகக் குழம்பியபடியே ஆசிரியர் அறைக்குள் நுழைந்தான் கதிர்வேல்.



அவனை அழைத்த சுந்தரலிங்கம், தன் டிஃபன் பாக்ஸை எடுத்து நீட்டினார்.

"வா... கதிர்வேல். காலைலயே வயித்து வலின்னே. இந்தா... இந்த தயிர் சாதத்தை சாப்பிடு. நல்லா குழைசலா இருக்கு. வயித்துக்கு இதமா இருக்கும். இதைச் சாப்பிடு!"

கனிவு ததும்பச் சொன்னார் கணித ஆசிரியர்.

கதிர்வேல் அசந்து போனான். இவரையா ஏமாற்றினாய்? அதை நினைத்தா சந் தோஷப்பட்டாய்?' என்று அவன் மனமே அவனைக் குத்தியது. கண்கள் பொங்கின. கண்கலங்க நின்ற அவனிடம் "எடுத்துக்கோ கதிர்வேல்" என்றார் சுந்தரலிங்கம் மீண் டும். அதைக் கேட்ட கதிர்வேலுக்கு ஏனோ வயிறு வலிப்பது போலத் தோன்றியது. ●

உயரமான மேற்குத் தொடர்ச்சி மலை; அலைபுரளும் அரபிக்கடல். இவற்றின் நடுவே மணற்பாங்கான கடற்கரை, அடர்ந்த காடுகள் சிறியதும், பெரியதுமான ஆறுகள்... என்று எழில் சூழ்ந்த பகுதி கேரளா!

தமிழக மூவேந்தர்களுள் சேர மன்னர்கள் ஆண்ட பகுதி இது. பிறகு, ஜாதி ரீதியிலான ஆட்சியாளர்களால் காலப்போக்கில் கோழிக்கோடு, கொல்லம், கொச்சி ஆகிய பகுதிகளில் வலுவான தனித்தனி ஆட்சிகள் அமைந்தன.

1498-ல் இந்தியாவுக்குக் கடல் வழி காணும் நோக்கத்துடன் புறப்பட்ட போர்ச்சுக்கல் நாட்டு வாஸ்கோடகாமா, பல்வேறு சவால்களைச் சந்தித்து, வெற்றிகரமாகக் கேரளாவின் கள்ளிக் கோட்டையில் தரை இறங்கியது சரித்திரம்!

அதனைத்தொடர்ந்து இந்திய-ஐரோப்பிய வர்த்தகம் வளர்ச்சி கண்டது. தேக்கு மரம், மிளகு, ஏலக்காய் போன்ற நறுமணப் பொருட்கள் மற்றும் தங்கம் போன்றவை ரோம் உட்பட பல்வேறு நாடுகளுக்குக் கப்பல்கள் மூலமாக அனுப்பப்பட்டன. கேரளாவில் உள்ள கொடுங்களூர் அந்தக் காலத்தில் உலகளாவிய வர்த்தக மையமாக இருந்திருக்கிறது.

காலப்போக்கில் டச்சுக்காரர்களின் வியாபாரம் வேரூன்றி, 1663-ல் அவர்கள் கொச்சியைக் கைப்பற்றினார்கள். அடுத்த நூற்றாண்டில் அவர்களது வீழ்ச்சியும், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் எழுச்சியும் நிகழ்ந்தது. 1763-ல் ஹைதர் அலி திருவிதாங்கூரைக் கைப்பற்றினார். அவருக்குப் பின் திப்பு சுல்தானின் ஆட்சி நடைபெற்றது. பிறகு, கேரளாவின் பெரும்பகுதி ஆங்கில ஆட்சிக்குட்பட்டது. இந்தியாவெங்கிலும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டம் நடந்தபோது கேரளாவும் அதில் பங்கேற்றது. சுதந்திரத்துக்குப் பிறகு 1949-ல் திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தானங்கள் இணைந்து ஒரு மாநிலமாயின. 1956-ம் வருடம் நவம்பர் முதல் தேதி இவற்றுடன் மலபார் பகுதியும் இணைந்து புதிய கேரள மாநிலம் உருவானது. கேரளா தனி மாநிலமாக உருவான இந்த தினம் 'கேரளா பிறவி' என்று கொண்





கௌதம் ராம்

டாடப்படுகிறது.

ஒருபுறம் அரபிக்கடலும், இன்னொரு புறம் தமிழ் நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களும் எல்லைகளாக அமையப் பெற்ற கேரளாவின் மக்கள் தொகை 3 கோடியே 18 லட்சம். மக்கள் தொகையில் ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை அதிகம். ஆயிரம் ஆண்களுக்கு 1058 பெண்கள் என்ற விகிதத்தில் மக்கள் தொகை உள்ளது. எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 91 சதவிகிதம். மிக அதிகக் கல்வி அறிவு கொண்ட இந்திய மாநிலங்களுள் முதன்மையானது கேரளா. தவிர, 100 சதவிகிதம் எழுத்தறிவு பெற்ற முதல் நகராட்சி: கோட்டயம் (1989ஆம் வருடம்); முதல் மாவட்டம்: எர்ணாகுளம் (1990);

நாட்டிலேயே தற்கொலைகள் அதிகம் நிகழும் மாநிலமும் கேரளாதான் என்பது வேதனை.

14 மாவட்டங்கள் கொண்ட மாநிலத்தில், சுமார் 1400 கிராமங்களும், 159 சிறிய பெரிய நகரங்களும் உள்ளன. அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டம் எர்ணாகுளம். மாநில சட்ட மன்றம் 140 உறுப்பினர்களைக் கொண்டது. கேரளாவிலிருந்து இந்தியப் பாராளுமன்றத்தின் லோக்சபாவுக்கு 20 உறுப்பினர்களும், ராஜ்யசபாவுக்கு 9 உறுப்பினர்களும் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

கேரளாவின் அரசியல் மற்ற இந்திய மாநில அரசியலில் இருந்து மாறுபட்டது. உலகிலேயே முதன் முதலாக கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயக ரீதியாக ஆட்சியைப் பிடித்தது கேரளாவில்தான். 1957 மார்ச் மாதத்தில் மாநில சட்டசபைக்குப் பொதுத்தேர்தல் நடந்தபோது, மொத்தம் இருந்த 126 இடங்களில் 60 இடங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றி, சில சுயேச்சை எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்தது. இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் முதலமைச்சராக ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் பதவி ஏற்றார். அப்போது தொடங்கி இன்று வரை கேரளாவில் காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையிலான கூட்டணி ஆட்சிதான் மாறி மாறி நடந்து வருகிறது.

கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரம். மாநிலத்தின் உயர்நீதி மன்றம் கொச்சி நகரத்தில் உள்ளது. கொச்சி, கோழிக்கோடு, திருச்சூர்,



கண்ணனூர், கோட்டயம், கொல்லம், ஆலப்புழை, பாலக்காடு, மல்லபுரம், பட்டணம் திட்டா ஆகியவை இதர முக்கியமான நகரங்கள்.

பெரியாறு, பாரதப்புழா, பம்பா, சாலியாறு, சாலக்குடி, அச்சன்கோவில், மூவாற்றுப் புழா, பவானி, கபினி என்று சிறியதும், பெரியதுமாக மொத்தம் 44 ஆறுகள் கேரளத்தில் ஓடுகின்றன. இவற்றில் 41 மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள், மீதி மூன்று மட்டுமே கிழக்கு நோக்கிப் பாய்பவை. இவை தவிர, பல முக்கியமான ஏரிகளும் உள்ளன. அவற்றில் மிகப்பெரியது வேம்பனாடு ஏரி. இதன் பரப்பளவு: 200 ச.கி.மீ.



* களரி

பல நீர் மின் நிலையங்கள் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. சாலை மற்றும் ரயில் போக்குவரத்து தவிர, நீர் வழிப் போக்குவரத்து மாநிலத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. 1600 கி.மீ. தூரத்துக்கு நீர் வழிப் போக்கு வரத்துக்கான வசதி உள்ளது.

முக்கிய மொழி மலையாளம். இது ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றியது. ஆன்மிகம், இலக்கியம் இரண்டிலும் ஆழ்ந்த பண்பாடும், கலாசாரமும் கொண்டது கேரளா. ஆதி சங்கரர் பிறந்த 'காலடி' கேரளாவில்தான் உள்ளது. அங்கே சங்கராச்சார்யா சமஸ்கிருதப் பல்கலைக் கழகம் செயல்பட்டு வருகிறது.

தவிர திருச்சூரில் விவசாயப் பல்கலைக் கழகமும், கொச்சியில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும் இயங்கி வருகின்றன. இவை தவிர, கிறிஸ்துவ மிஷனரிகள், நாயர் சர்வீஸ் சொசைட்டி, ஸ்ரீ நாராயண குரு டிரஸ்ட் போன்றவை கேரளா முழுவதிலும் ஏராளமான கல்லூரிகளை நடத்தி வருகின்றன.

இலக்கியம், கலை மற்றும் கலாசாரத் துறைகளிலும் முத்திரை பதித்த மாநிலம் கேரளா. கூத்து, கதகளி, மோகினியாட்டம், ஓட்டம்துள்ளல் போன்றவை கேரளாவின் பாரம்பரியக் கலைகள். வீரவிளையாட்டுகளில் களரிப்பயட்டும், வர்மக் கலையும் முக்கியமானவை. கவி வள்ளத்தோள், பஷீர், தகழி சிவசங்கரன், பொற்றேகாட் போன்றோர் புகழ்பெற்ற மலையாள இலக்கியவாதிகள். அதைப் போன்றே அகில இந்திய விருது பெற்ற திரைப்படங்கள், சர்க்கஸ் மற்றும் மேஜிக் கலைகளும் கேரளாவுக்குப் பெருமை சேர்ப்பவை.

இந்திய சுற்றுலாத்துறையில் முன்னணி வகிக்கும் மாநிலங்களில் ஒன்று கேரளா. இம்மாநிலத்தின் பாரம்பரிய மருத்துவ முறைகள் மருத்துவச் சுற்றுலாவின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. கோவில்கள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள் என, சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் விஷயங்கள் பல இங்கே உண்டு. கேரளாவின் அறுவடைத்திருவிழாவுக்கு 'ஓணம்' என்று பெயர். 'விஷு' என்பது மலையாளப் புத்தாண்டு!

விஷ்ணுவின் அவதாரமான பரசுராமர் இங்கு வந்து, தம் கோடரியைக் கடலில் வீசி எறிந்தார். அது விழுந்த தூரம் வரை கடல் பின்வாங்கியது. அப்படி உருவான நிலப்பகுதியே 'கேரளம்' என்கிறது கேரள மகாத்மியம்!

கடவுளின் தேசம் என்று வர்ணிக்கப்படும் கேரளம் அழகும் வளமும் மிக்க பகுதி ●

உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராக குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● கோகுலம் சிறுவர் சங்கம் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை (பக்கம் 59) நிரப்பி, **புகைப்படத்தை இணைத்து** அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் **புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள்.** புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!

● முதல் வகுப்பு தொடங்கி மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● **ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.**

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.



● **மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.**

● **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஓடு சுமையா?

கதை : த. கவின்,
உ.எண் 1467, நம்பியூர்
படம் : பிள்ளை





பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்கவேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



நீர் தெளித்த குரங்கு!

வளர்கவி

கதைப்பாடல்

தொப்பி விற்கும் வியாபாரி
தூக்கம் வரவே மரத்தடியில்
தூக்கி வந்த மூட்டையினைத்
தலைக்கு வைத்துப் படுத்தானாம்!

அயர்ந்து தூங்கும் வேளையிலே
அந்த மரத்தில் இருந்தவொரு
குட்டிக் குரங்கு கீழிறங்கி
குதித்து வந்தது அவனருகே!

‘விற்க வந்த வியாபாரி
விற்பனை செய்யத் தவறிவிட்டு
அற்பத் தனமாய்த் தூக்கத்தில்
அயர்ந்து கிடத்தல் சரியாமோ?

சுற்றும் முற்றும் நடக்கின்ற
செயல்கள் அறியா மானிடர்கள்
வெற்றி பெறவே முடியாதே!
வீணாய்ப் போவார் வாழ்க்கையிலே!

எனவே இவனை இப்போதே
எழுப்பி விட்டு அன்பாக
பணமும் பொருளும் பத்திரமாய்ப்
பார்த்துக் கொள்ளச் செய்வோமே!’

‘பகலில் தூங்குதல் படுபாவம்!
பழிச்சொல் சேரும் நாளைதான்!
அதனால் இவனை இப்போதே,
அருகே சென்று எழுப்பிடுவோம்!’

என்று கருதி அருகிருந்த
ஆற்று நீரைக் கைகளிலே
கொண்டு வந்து அவன்முகத்தில்
கொஞ்சம் தெளித்து எழுப்பியதாம்!

தூக்கம் நீங்கி எழுந்தவனோ
புரிந்து கொண்டான் எல்லாமே!
கைகள் கூப்பிக் குரங்கதனின்
செயலுக்கு நன்றி சொன்னானே!





* Glossy black

பேசும் பறவை!

தத்தை, சுகம், கிள்ளை... என வெவ்வேறு பெயர்களால் சொல்லப்படுவது கிளி. இளம்பச்சை, கரும்பச்சை, நீலம் என்று வண்ணக் கலவையாக, வசீகரப் படுத்துபவை கிளிகள்!

பொதுவாக, இவை மூன்றரை அங்குலம் முதல் 40 அங்குலம் வரை பல்வேறு அளவுகளில் பலவிதமாகக் காணப்படுகின்றன. பழங்கள், விதைகள் பூக்களின் மொட்டுகள் போன்றவற்றை இவை உணவாக உட்கொள்ளும். எப்போதாவது பூச்சிகளையும் சாப்பிடும்.

கிளிகளில் சுமார் 372 வகை உள்ளன. கிளியின் அலகு (மூக்கு) பலம் வாய்ந்தது. பழங்களையும், அதனுள் உள்ள கொட்டைகளையும்கூட உடைத்துச் சாப்பிட வசதியானது. இவை பழங்களைச் சாப்பிட்டுவிட்டுப் போடும் விதைகளிலிருந்து மீண்டும் செடிகள் முளைக்கின்றன.

பறவைகளிலேயே பேசும் தன்மை வாய்ந்தவை கிளிகள்தான். இவை இருபது வார்த்தைகள் வரை பதிய வைத்துப் பேசும் ஆற்றல் வாய்ந்தவை. சில வகை ஆப்பிரிக்கக் கிளிகள் சுமார் 100 வார்த்தைகளைப் பதிய வைத்துப் பேசும் ஆற்றலைப் பெற்றுள்ளன.

கிளிகள் ஒரு முறைக்கு இரண்டு முட்டைகளே இடுகின்றன. பெண் கிளிகள் 26 நாட்கள் முட்டைகளை அடைகாத்து, குஞ்சு பொரிக்கின்றன. இந்த நாட்களில் ஆண் கிளி, பெண் கிளிக்கு உணவைக் கொண்டு வந்து தருகிறது. ஆண் கிளிகள் முன்னே செல்லப் பெண்கிளிகள்





* Macaw என்னும் பஞ்சவர்ணக்கிளி

அவற்றைத் தொடர்ந்து பறக்கும்.

கிளிகள் மரப்பொந்துகளில், பெரும்பாலும் உயரமான இடங்களில் - வசிக்கின்றன.

இவற்றின் கால்களில் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலுமாக நான்கு விரல்கள் காணப்படுகின்றன. கிளியின் வாழ்நாள் சராசரியாக 50 ஆண்டுகள்.

கிளிகளில் ஒரு வகை, டூகன் (Toucan) கிளிகள். இவை தெற்கு அமெரிக்காவில் காணப்படுகின்றன. இவற்றின் மூக்கு நீளமாகவும், பல நிறத்திலும் இருக்கும். சுமார் 20 அங்குலம் வரை, அதாவது ஒன்றரை அடி வரை, வளர்கின்ற இந்த வகைக் கிளிகள் பறக்கும்போது இறக்கைகளை மிக வேகமாக அடித்து ஒருவித ஒலியை எழுப்பிக் கொண்டே பறக்கும். டூகன் கிளிகள் பெரும்பாலும் ஆறு, ஆறு கிளிகளாகவே சேர்ந்து பறக்கின்றன.



* பூச்சிகளை உண்ணும் 'கியா'



* டூகன் கிளி

எஸ்.தனிகைவேல்,
உ.எண் 762, காஞ்சிபுரம்



குழப்பாதே!

சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன், பாகிஸ்தான் இந்தியாமீது போர் தொடுத்தது.

அதற்குச் சில ஆண்டுகள் முன்பாகத் தான் இந்தியாவைப் பிரித்துப் பாகிஸ்தான் என்கிற தனி தேசம் உருவாக்கப்பட்டிருந்தது. இதற்கான எல்லைப் பகுதிகளைத் தீர்மானித்தபோது, இரண்டு நாடுகளுக்கும் இடையே ஏகப்பட்ட பிரச்னைகள், இழுபறிகள், தலைவலிகள்.

அதன் விளைவாகவே, இந்தப் போர். இதன்மூலம், இந்திய எல்லைக்குள் இருந்த சில பகுதிகளை இணைத்துக் கொண்டு விடவேண்டும் என்று திட்டமிட்டது பாகிஸ்தான்.

இதற்கான விவாதங்கள் தொடங்கிய போது, பாகிஸ்தான் ராணுவ மேலதிகாரி ஒருவர் சொன்னார் : ''நம்மிடம் இருக்கும் டாங்கிகள் ரொம்பப் பழசு. இதையெல்லாம் வெச்சுக்கிட்டு இந்தியாவை ஜெயிக்க முடியாது!''

'டாங்கி' என்பது, ராணுவ வீரர்கள், ஆயுதங்களைத் தாங்கிச் செல்கிற பிரம்மாண்டமான வண்டி. அதற்குள் உட்கார்ந்தபடி எதிரி நாட்டு இலக்குகளைக் குறிபார்த்துச் சுடமுடியும்.

''நம்மகிட்டதான் நிறையப் பணம் இருக்கே. புதுசா சில டாங்கிகளை வாங்

கிட்டா என்ன?'' என்றார் ஓர் அதிகாரி.

''நல்ல யோசனை'' என்றார் அடுத்தவர். ''அமெரிக்காவிலே பேட்டன் டாங்கி-ன்னு ஒண்ணு புதுசா வந்திருக்காம். நாம அதை வாங்கிட்டோம்னா இந்தியாவைச் சுலபமா வீழ்த்திடலாம்!''

எல்லோரும் பெரிதாகத் தலையாட்டி னார்கள். ஏகப்பட்ட பணம் செலவழித்துச் சில நூறு பேட்டன் டாங்கிகள் வாங்கப் பட்டன.

ஆனால், அந்த நவீன டாங்கிகள் பாகிஸ்தானுக்கு வந்து சேர்ந்த நேரம், போர் நெருங்கிவிட்டது. வீரர்கள் அதில் ஒழுங்காகப் பயிற்சி எடுத்துக்கொள்ளக்கூட நேரம் இல்லை.

''அதனால என்ன? எல்லாம் நேரடியாப் போர்க்களத்துக்குப் போய்ப் பார்த்துக் கலாம்.'' என்று புறப்பட்டுவிட் டார்கள்.

பாகிஸ்தான் ராணுவத்தின் அதி நவீன டாங்கிகளைப் பார்த்த இந்தியா பதறிப்போய்விட்டது. 'இதோட ஒப்பிட்டா நம்மகிட்ட இருக்கிற ஆயுதங்கள்லாம் ரொம்பப் பழசாச்சே'' என்று கவலைப் பட்டார்கள் இந்திய வீரர்கள்.

அதற்காக இப்போது புது டாங்கிகளை வாங்கமுடியுமா? இருப்பதை வைத்துச் சண்டை போடவேண்டியதுதான்.


போர் தொடங்கியது. லேட்டஸ்ட் டாங்கிகளின்மூலம் இந்தியா வின்மீது ஆதிக்கம் செலுத் தலாம் என்று அதிவேக மாக முன்னேறி வந்தது பாகிஸ்தான். ஆனால், அவர்கள் நினைத்தது நடக்க வில்லை. மாறாக, பாகிஸ்தான் படைகள் பின்வாங்கி ஓடின.

ஏன்? அந்த அதிநவீனத் தொழில்நுட் பம் அவர்களுக்குப் பயன்படவில்லையா? அரதப் பழசான டாங்கிகளை வைத்துக் கொண்டு இந்தியா எப்படி பாகிஸ்தானை ஜெயித்தது?

அது ரொம்ப வேடிக்கையான கதை. போர் முடிந்தபிறகு பாகிஸ்தான் ராணுவ வீரர்களைக் கூப்பிட்டு, ''நீங்க ஏன் தோத்துப்போனீங்க?'' என்று கேட்டபோது, அவர்கள் பேட்டன் டாங்கிகளைத்தான் கைகாட்டினார்கள்.

''நீங்க புது டாங்கிகளை வாங்கிக் கொடுத்துட்டீங்க. அதில என்னென்னவோ இருக்கு. ஏகப்பட்ட பட்டன்கள் இருக்கு. எதை அழுத்தினா என்ன ஆகும்னே புரியலை'' என்றார் ஒரு வீரர், 'இதனால, நாங்க அடுத்து என்ன செய்யறதுன்னு யோசிச்சு முடிவு செய்யறதுக்குள்ளே இந்தியாக்காரங்க எங்களைப் பிடிச்சுட் டாங்க.''

பாகிஸ்தான் ராணுவம் அதிர்ந்து



போனது.

இதேமாதிரி ஒரு கூத்து சமீபத்தில் நடந்தது. போர்க்களத்தில் அல்ல: மேலே நடுவானத்தில்!

அது புத்தம்புது விமானம். எங்கே பார்த்தாலும் பளபளப்பு. விமானியைச் சுற்றிலும் ஏகப்பட்ட பொத்தான்கள், கருவிகள், வேகம், அழுத்தம், மற்ற விஷயங்களைக் காண்பிக்கும் மானி (மீட்டர்)கள், இன்னும் என்னென்னவோ.

இதையெல்லாம் பார்த்த பைலட் குழம்பிவிட்டார். ஏற்கெனவே அவர் பல விமானங்களில் நல்ல பயிற்சி பெற்றவர். ஆனால், இப்போது கண்முன்னே இருக்கும் தொழில் நுட்பம் அவருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியது. விமானம் ஒழுங்காகப் பறக்கிறதா, இல்லையா என்று உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் தவித்தார்.



அதிநவீனத் தொழில்நுட்பம் அவர்களுக்குப் பயன்படவில்லையா? அரதப் பழசான டாங்கிகளை வைத்துக்கொண்டு இந்தியா எப்படி பாகிஸ்தானை ஜெயித்தது?

அப்போது, விமானத்தின் இடதுபக்கத்தில் இருந்த ஒரு சிறிய சிவப்பு விளக்கு, திடீரென்று அணைந்துபோனது. பைலட் பதறினார். 'இந்த விளக்கு எதுக்கு? இது ஏன் அணைஞ்சுபோச்சு? இதனால ஏதாவது பிரச்னை வருமா?'

இந்த நேரத்தில், உதவி பைலட் வந்தார்.

"என்னாச்சு சார்?"

"இந்தச் சிவப்பு விளக்கு பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

உதவி பைலட் தலையைச் சொறிந்தார், "ஸாரி சார், எனக்கு ஒண்ணும் புரியலை."

அவர்கள் இருவரும் விமானத்தின் தொழில்நுட்ப விஷயமறிந்த ஃப்ளைட் எஞ்சினியரைக் கூப்பிட்டார்கள். பிரச்னையை விளக்கினார்கள்.

இப்படி அனைவரும் ஒரு சிறிய சிவப்பு விளக்கைப்பற்றிக் கவலைப்பட்டு விவாதித்தனர். ஆனால், விமானத்தைச் செலுத்துகிற முக்கியமான பொறுப்பை மறந்துவிட்டார்கள். அது ஏதோ ஒரு திசையில் தறிகெட்டுப் பறந்துகொண்டிருந்தது.

கடைசி நேரத்தில் யாரோ அதைக் கவனித்தார்கள். பாய்ந்து சென்று விமானத்தின் பாதையை ஒழுங்குபடுத்த முயற்சி செய்தார்கள். பலன் இல்லை; அது ஒரு மலையில் மோதிச் சிதறிவிட்டது.

இந்த இரண்டு சம்பவங்களையும் யோசித்துப் பாருங்கள்.

அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்ப மேம்பாடுகளும் மனிதர்களின் வாழ்க்கையை எளிமைப்படுத்தவும் சௌகர்யங்களை அதிகரிக்கவும்தான் உருவாக்கப்படுகின்றன. அதைக் கவனமாகச் செய்யாவிட்டால், அந்த நவீனத் தொழில் நுட்பமே நம்மைக் குழப்பிவிடும்.

நாளைக்கு நீங்கள் அறிவியலாளர்களாகவோ, தொழில்நுட்ப மேதைகளாகவோ உருவாகலாம். புதுப்புது விஷயங்களைக் கண்டறியும்போது இந்த எளிய விதிமுறையை மறந்துவிடாதீர்கள். அறிவியலின் நோக்கம் குழப்புவது அல்ல; தெளிவுபடுத்துவது! ●


கோகுலம்
டைஜஸ்ட்
50
கடல் முள்ளம்பன்றி!
49
அலெக்ஸாண்டரின் ஆசிரியர்!
30
ஒலி உண்டாவது ஏன்?
26
6 லட்சம் மின்னல்கள்!
29
அணில் பாடிய பாட்டு!

* வெள்ளை யானை



* முளைக்கும் பல்



* நீருக்குள் பறக்கும்







✱ அதிக நாடுகளில், அதிக முறை, தபால் தலையில் இடம் பெற்ற இந்தியர், 'மகாத்மா காந்தி'. 81 நாடுகளில் நூறுக்கும் அதிகமான தபால் தலைகள்.

✱ அணுகுண்டைவிட 1,500 மடங்கு அதிக சக்தி கொண்டது ஹைட்ரஜன் குண்டு.

✱ மனிதர்களுக்கு 'பால் பற்கள்' விழுந்து முளைக்கும். அதன்பிறகு விழுந்தால் முளைக்காது. ஆனால், எத்தனை முறை விழுந்தாலும் முதலைக்கு பல் முளைத்துவிடும்.

✱ 'டிப்பர்' என்ற பறவை நீருக்குள்ளும் (நீந்தும்) பறக்கும் சக்தி பெற்றது.

✱ பென்சில் தயாரிக்க காரீயம், களி மண், மரக்கூழ் ஆகியவை பயன்படுகின்றன.

✱ உலகம் முழுவதும் ஓர் ஆண்டுக்குச் சராசரியாக 1 கோடியே 60 இலட்சம் இடிகள் விழுகின்றன. ஒரு நாளைக்கு 6 இலட்சம் மின்னல்கள் தோன்றுகின்றன.

✱ அமெரிக்காவில் வெப்பப் பிரதேசக் காடுகளில் காணப்படும் 'பாசிலிஸ்க்' என்றழைக்கப்படும் பல்லிகள் தண்ணீரில் மணிக்கு 12 கி.மீட்டர் வேகத்தில் நீந்தும் ஆற்றல் பெற்றவை.

✱ சந்திரன் பூமி இருக்கும் திசையிலிருந்து மெல்ல மெல்ல விலகிப் பின்நோக்கிச் செல்கிறது. எனவே சில லட்சம் வருடங்களுக்குப் பிறகு ஒரு சந்திர கிரகணத்தைக் கூடப் பார்க்கவே முடியாது.




-ஆர்.ரமேஷ்குமார்,
உ. எண் 1355, கோவை



6 லட்சம் மின்னல்கள்!

✱ மனிதர்கள் பயணிக்காத சரக்கு விமானங்களில் ஜன்னல்களே இருக்காது.

✱ இந்திய ராணுவ வீரர்களின் குட்டி தேவதைகளாகப் போற்றப்படும் விலங்கு கோவேறு கழுதை. மூன்று ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்படும் இந்தக் கழுதைகள்தான் வீரர்களின் சுமைகளைத் தூக்கிச் செல்கின்றன.



✱ அமெரிக்க மாநிலங்களில் 'நியூ' என்ற பெயருடன் ஆரம்பமாகும் மாநிலங்கள் மொத்தம் நான்கு உள்ளன. அவை நியூ ஹாம்ப்ஷையர், நியூ ஜெர்ஸி, நியூயார்க், நியூமெக்ஸிகோ.

✱ வெள்ளை நிற யானைகளைத் தாய்லாந்தைப் போலவே - புனிதச் சின்னமாக, தெய்வமாகக் கருதும் இன்னொரு நாடு பர்மா.

✱ மண் ஆராய்ச்சியின்படி மிகவும் பழைமையான கண்டம் எனப்படுவது ஆஸ்திரேலியா.

✱ சிகாகோ பல்கலைக் கழகத்தில் கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியப் பத்திரிகையாளர் குல்தீப் நய்யார் (1999).

- எம்.மிருணாளினி, மதுரை

✱ இந்தியாவிலேயே நீண்ட கடற்கரையைக் கொண்ட மாநிலம் குஜராத்.

✱ எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8 ஆயிரத்து 848 மீட்டர்கள்.

✱ பிரம்மபுத்திரா நதியின் நீளம் 2 ஆயிரத்து 900 கிலோ மீட்டர்கள்.

✱ 'இந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுவது மும்பை மாநகரம்.

✱ தாவரவியலில், தக்காளி பழமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- பா.கணேசன், உ. எண் 467, வடபுதுப்பட்டி

அணில் பாடிய பாட்டு!

கதை : சு.ஸ்வேதா, உ.எண் : 8, தேனி

படம் : பிள்ளை





பொறுத்தவரை நிலைமை வேறானது. கிரகணம் இருந்தாலும், இல்லாவிடினும் சூரியனை நேராகப் பார்ப்பது கண்களுக்குத் தீங்கு விளைப்பதாகும். சூரியனின் ஒளிக் கதிர்கள் கண்ணின் விழித்திரையை எரித்து நிரந்தரக் குருடாக்கும் தன்மை வாய்ந் தவை. கிரகணத்தின்போதும் சூரியனின் ஒளிக்கதிர்கள் இத்தகைய தீமையை விளைவிக்கும். எனவே, கிரகணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், சூரியனை நேராகப் பார்க்கக் கூடாது.

- ஜி.சரவணன், பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். ந.மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்

குண்டு துளைக்காத ஆடைகள் எதனால் தயாரிக்கப்படுகின்றன? குண்டு அதனுள் பாய்வதில்லையே ஏன்?

சாதாரண ஆடைகள் பருத்தி, சின்தெடிக், நைலான் உள்ளிட்ட இழைகளால் தயாரிக்கப் படுகின்றன. ஆனால், குண்டு துளைக்காத ஆடைகளைத் தயாரிக்கப் பயன்படும் இழைகள் வேறு.


'ஆரோமாடிக் பாலிக் அமைடு' (auromatic polic amide) என்ற நார் இழை களால் இந்த ஆடை தயாரிக்கப்படுகிறது. இந்த இழைகள் குண்டை எதிர்க்கும் தன்மை வாய்ந்தவை. குண்டு ஆடையில் படும்போது ஆடையில் சில இழைகள் விரிந்து அதிர்வடைகின்றன. இவ்வாறே ஆடை முழுதும் அதிர்வு ஏற்பட்டு குண்டை எதிர்க்கிறது. அப்போது குண்டின் தாக்குதல் வேகம் குறைகிறது. அதனால் குண்டு பட்டால்கூட இந்த ஆடைகள் பாதிக்கப்படுவதில்லை.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி, உ. எண் 1375, கோபி


ஒலி உண்டாவது ஏன்?



என்.பிரதீப், எட்டாம் வகுப்பு,
காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி, சிதம்பரம்



கொ.ஈஸ்வரி, ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, கரூர்



கு.கௌரிபவானி, ஏழாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, விளாத்திகுளம்



த.பாரத், ஏழாம் வகுப்பு,
உ. எண் 576, யாகப்பா
பள்ளி, தஞ்சாவூர்



ஞ.அகிலா,
ஏழாம் வகுப்பு, கிங்
யுனிவர்ஸ் மெட்ரிக்
பள்ளி, நெல்லை

உங்கள் கைவண்ணம்!



ச.சிவரஞ்சனி, எட்டாம் வகுப்பு,
திரு புனிவால்ஸ் மெட்ரிக்.
பள்ளி, நெல்லை




எம்.வித்யா, எட்டாம் வகுப்பு,
ரோஸ் மேரி மெட்ரிக். மேல்நிலைப்
பள்ளி, திருநெல்வேலி





பி.ஹேமாஸ்ரீ, உ. எண் 1458,
சிஷ்யா மெட்ரிக். மேல்நிலைப்
பள்ளி, திருவண்ணாமலை



பி.நெல்லை கணேஷ், எட்டாம்
வகுப்பு, காஞ்சி ஸ்ரீ சங்கரா அகாடமி
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
திருச்செந்தூர்

"முருகா, கொஞ்சம் பொறுத்துக்கோ, தினம் அஞ்சு கி.மீ. நடந்து போயி படிச்சுட்டு வரே. கஷ்டமாத்தான் இருக்கும். அடுத்த வருஷம் நிச்சயமா சைக்கிள் வாங்கித் தந்துருவேன்.'' அப்பா சொன்னதை யோசித்தபடியே நடந்து கொண்டிருந்தான் முருகன். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் பெற்றோர் இருவருமே கூலி வேலை செய்பவர்கள்தான். அந்த வருமானத்தில் அவனை மிகுந்த சிரமப்பட்டு படிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். அவனும் பள்ளியின் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தான்.

நடந்து கொண்டிருந்த முருகனின் பார்வையில் பட்டது அந்தப்பை. 'இது யாருடையது?' என்ற கேள்வி எழுந்தவுடனே, ஆசிரியர் சொன்னது நினைவுக்கு வந்தது. 'சாலையிலோ, வேறு எங்கோ வித்தியாசமான பொருளோ, பையோ எது கிடந்தாலும் உடனே தொடக்கூடாது. அப்படிப் பார்த்தால் அருகில் உள்ள பெரியவர்களிடமோ, காவல் நிலையத்திலோ சொல்ல வேண்டும்.'

சுற்றிலும் பார்த்தான். யாரும் தென்படவில்லை. கீழே கிடந்த நீளமான குச்சியை எடுத்தான். தள்ளி நின்று அந்தப் பையைத் தட்டினான். அதில் மெத்தென்று ஒலி கேட்டது. 'ஆபத்தான பொருள் இல்லை'



க.கார்த்திக்,
உ.எண் 952, நம்பியூர்

என்று தோன்றியது அவ னுக்கு. நெருங்கிச் சென்று பையை எடுத்தான். பிரித்துப் பார்த்தான். நூறு ரூபாய்க் கட்டுகள் ஐந்து இருந்தன. திடுக்கிட்டுப் போனான் முருகன். அதை எடுத்துக் கொண்டு, வழியிலிருந்த கிராமத் தலைவரிடம் விவரத்தைச் சொல்லி, பையை ஒப்படைத்தான். பள்ளிக்குச் சென்றான். அதை மறந்தே போனான்.

அடுத்த நாள் மதியம்! வகுப்பறையில் இருந்த முருகனை,

சைக்கிள் வேணும்!



தலைமை ஆசிரியர் அழைப்பதாக உதவி யாளர் வந்து அழைத்தார். என்னவென்று புரியாமல் குழம்பியபடியே சென்றான் முருகன். உள்ளே நுழைந்தவன், வியந் தான். அங்கே அவனுடைய அம்மாவும் அப்பாவும் கூட அமர்ந்திருந்தார்கள்.

''முருகா உன்னைப் பாராட்டத்தான் வரச் சொன்னேன். நேத்திக்கு நீ எடுத்துக் கொடுத்த பணம் இவரோடதுதான்.''

தலைமையாசிரியர் சொன்ன பிறகுதான், அங்கிருந்த இன்னொருவரைக் கவனித்தான் முருகன்.


''தம்பி, கூலி கொடுக்கற துக்காக பாங்குல இருந்து எடுத்துட்டு வந்த பணம் அது. அவ்வளவு பணத்தைப் பார்த் தும் உனக்கு ஆசை வரலை பாரு. அதான் பெரிய விஷயம்! உனக்கு என்ன வேணும்?''

அதைக் கேட்டதும் ஒன்றும் புரிய வில்லை அவனுக்கு. கொளுத்தும் வெயிலில் செருப்புகூட இல்லாமல் நடக்கும் அப்பாவின் ஞாபகம்தான் வந்தது.

''அப்பாவுக்குச் செருப்பு வாங்கணும்!''

அதைக் கேட்ட மாத்திரத்தில் அனை வரும் வியந்தனர். 'தான் விரும்பிய சைக்கிளைவிட, தந்தையின் காலுக்குச் செருப்புதான் முக்கியம்' என்று புரிந்த மகனை நினைத்து பெற்றோரின் கண்களில் கண்ணீர் துளித்தது.

வழி காட்டுங்கள்!



பசியோடு இருக்கும் முயலுக்கு
கேரட்டை அடைய வழி காட்டுங்கள்.

ஸ்கூட்டர்

ஆண், பெண் இரு பாலரும் எளிதில் ஓட்டக் கூடிய இரு சக்கர வாகனம் ஸ்கூட்டர். அதைத் தாண்டி இப்போது ஸ்கூட்டியெல்லாம் வந்துவிட்டது. என்றாலும் ஸ்கூட்டர் என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா? ஆங்கிலத்தில் 'ஸ்கூட்' என்றால் 'பாய்ந்து செல்' என்று அர்த்தம். இதிலிருந்துதான் ஸ்கூட்டர் என்ற பெயர் வந்தது.

- கே.எஸ்.இந்துஜா, ஒன்பதாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், சேத்துப்பட்டு



பைஜாமா

உடை வகைகளில் ஒன்றான தளர்த்தியான முழுக்கால் சட்டையை பைஜாமா என்கிறோம். இது எந்த மொழிச் சொல் தெரியுமா? பாரசீக மொழிச் சொல்! பாரசீக மொழியில் பை என்றால் கால். 'ஜாமாக்' என்றால் துணி. 'காலுக்கு அணியும் துணி'தான் 'பைஜாமாக்'. இந்த 'பைஜாமாக்' என்ற சொல்லே 'பைஜாமா' என்று மருவியிருக்கிறது.

- நா.லெட்சுமண ராம், ஒன்பதாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், சேத்துப்பட்டு



பாய்ந்து செல்!



டாக்குமெண்டரி

செய்திப் படங்களை ஆங்கிலத்தில் டாக்குமெண்டரி என்கிறோம். இந்த வார்த்தைக்கான வேர்ச்சொல், பிரெஞ்சு மொழியிலிருந்து வந்தது. என்றாலும் முதன் முதலில் இதைப் பயன்படுத்தியவர், ஸ்காட்லாந்தைச் சேர்ந்த 'ஜான் க்ரீயர்சன்'. பிரெஞ்சு மொழிச் சொல்லான 'டாக்குமெண்டர்' (Documentaire) என்பதற்கு, செய்தி என்று அர்த்தம். இதிலிருந்துதான் ஆங்கிலச் சொல்லான டாக்குமெண்டரி உருவானது.

- ச.அர்ஜுன், பத்தாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், சேத்துப்பட்டு



நீரில் மிதக்கும் குண்டு!

I. 1. சுட்டால் சாகமாட்டான்; பசி யாற்றுவான் - அவன் யார்?

2. மூடித் திறந்தான் ஓசையில்லாமல் - அவன் யார்?

3. முறையின்றி தொட்டால் உயிர் உதிரும் - அது என்ன?

4. விழும் வரை சுழலுவான் - அவன் யார்?

- அ.அனுசுயா, உ. எண் 110, காஞ்சிபுரம்

II.1. ரத்தத்தால் வளர்வது, ரத்தம் இல்லாதது - அது என்ன?

- சு.முருகேசன், ஒன்பதாம் வகுப்பு, மூத்தாலம்மன் இந்து உயர்நிலைப் பள்ளி, வடபுதுப்பட்டி

III. 1. கண்ணால் பார்க்கும்; கண்டதைப் பறிக்கும்; பறித்ததைக் கொடுக்கும் - அது என்ன?

2. தண்ணீரில் மிதக்கும்; கப்பலல்ல. கனமாக இருக்கும்; கல்லுமல்ல. வெயிலில்

விடுகதைகள்

உருகும்; வெண்ணெய் அல்ல - அது என்ன?

3. பிறக்கும்போது சுருண்டிருக்கும்; பிறந்தபின் விரிந்து இருக்கும் - அது என்ன?

4. வெள்ளிக்கட்டி மண்ணுக்குள்ளே - அது என்ன?

- எம்.மிருணாளினி, ஏழாம் வகுப்பு, அக்னு எஸ்.சுந்தர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை

IV. 1. கடித்தால் கடிபடாதவன்; பிடித்தால் பிடிபடாதவன் - அவன் யார்?

2. ஏழு கறியும் சோறு ஆக்கியிருக்கு; இலையை எடுத்துவிட்டு உண்ண வேணும் - அது என்ன?

3. சின்னச் சின்னப் பெட்டிக்குள்ளே சேதி எல்லாம் கண்ணுக்குள்ளே - அது என்ன?

4. நாக்கு இல்லாதவன்; நல்லது சொல்வான் - அது என்ன?

- எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை

V. 1. நாலு கால் உள்ளவனுக்குக் கண்கள் மட்டும் ஆயிரம் - அவன் யார்?

2. ஜோடியாகவே உழைப்பார்கள்; ஜோராகவே சுமப்பார்கள்; வாடி ஒருவன் வீழ்ந்தாலும் கூடி இருவரும் ஓய்வார்கள் - அவர்கள் யார்?

3. வட்டமுக வடிவழகன், காலையிலே வந்தான்; பேசவில்லை. மாலையிலே போனான் சொல்லவில்லை - அவன் யார்?

4. பறந்தபடி பாடுவான்; உட்கார்ந்தால் கடிப்பான் - அவன் யார்?

- பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை

VI. 1. அந்தி கிழக்கே அதிகாலை மேற்கே - அது என்ன?

2. வெள்ளிக்குண்டு வெண்கலக்குண்டு தண்ணீரில் போட்டால் மிதக்கும் குண்டு - அது என்ன?

3. துடு துடு மலையிலே, சுந்தர மலையிலே, அந்தத் தோகையின் மந்திரக் கூத்து - அது என்ன?

4. தலையிலே தடியிருக்கும். என்றாலும் பயப்படுவான் - அவன் யார்?

- ரா.நித்யஸ்ரீ, உ. எண் 852, மதுரை



விடைகள் :

I. 1.தோசை, 2. கண்இமை, 3.மின்சாரம், 4.பம்பரம் **II.** 1.நகம் **III.** 1.கேமிரா, 2.பனிக்கட்டி, 3.வாழை இலை, 4.முள்ளங்கி **IV.** 1.தண்ணீர், 2.கறிவேப்பிலை, 3.தொலைக்காட்சிப் பெட்டி, 4.புத்தகம் **V.** 1.நாற்கட்டில், 2.செருப்பு, 3.சூரியன், 4.கொசு **VI.** 1.வானவில், 2.வெண்ணெய், 3.மோர் கடையும் மத்து, 4.மான்

கோகுலம்

மே 2010




அட்டகாசம்!
OUTH
RICA



சகிப்புத்தன்மை!

சுவாமி விவேகானந்தர் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்த சமயம். அவர் பயணம் செய்த அதே ரயில் பெட்டியில், சில ஆங்கிலேயப் படை வீரர்களும் பயணம் செய்தனர். காவியுடையில் மிகவும் எளிமையாக இருந்த சுவாமிகளைப் பற்றி, அவர்கள் மிகவும் இழிவாக ஆங்கிலத்தில் பேசிக்கொண்டே வந்தனர். அவர்கள் பேசுவது எதுவுமே புரியாததுபோல, சுவாமிகள் அமர்ந்திருந்தார்.

சேலம் சந்திப்பில் புகைவண்டி நின்றது. வண்டியில் இருந்த சுவாமி விவேகானந்தரைக் கவனித்த புகைவண்டி நிலைய அதிகாரி, ஓடோடி வந்து வணங்கி மரியாதை செய்தார். அப்போது சுவாமிகள் அவருடன் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுவதைக் கவனித்த அந்தப் படை வீரர்கள் திடுக்கிட்டுப் போனார்கள்.

தாங்கள் அவரைப் பற்றிக் கண்டபடிப் பேசிவிட்டதை எண்ணி கவலைப்பட்டனர். மீண்டும் புகைவண்டி புறப்பட்டது. படை வீரர்களில் ஒருவன் ''தாங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுகிறீர்களே! நாங்கள் தவறாகப் பேசும்போது தடுத்துக் கூறியிருக்கலாமே?'' என்று கேட்டான்.

புன்னகை புரிந்த சுவாமிகள் அமைதியாக, ''உண்மைதான். ஆனால், நான் முட்டாள்களைச் சந்திப்பது இது முதன் முறையல்ல'' என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு மௌனமானார். அந்த வீரர்கள் வெட்கித் தலைகுனிந்தனர்.

சமயோசிதம்!

கிரேக்க மாவீரன் அலெக்சாண்டரின் படைகள் சென்று கொண்டிருந்தன. வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதைக் கடந்து செல்லுமாறு வீரர்களுக்கு அவர் உத்தரவிட்டார்.

ஆற்றின் ஆழமும் அதிகம்; வெள்ளத்தின் வேகமும் அதிகம்! கடக்கப் பாலமும் இல்லை. எப்படிக் கடப்பது?




என்று வீரர்கள் தயங்கினார்கள்.

உடனே அலெக்சாண்டர், "நான் எப்படிக் கடக்கிறேன் எனப் பாருங்கள்" என்று சொல்லித் தன் மார்பில் அணிந்திருந்த இரும்புக் கவசத்தைக் கழற்றி எடுத்து, ஆற்றில் மிதக்க வைத்து, அதன் மேல் ஏறி நின்றார். நீண்ட வாளைத் துடுப்பாகப் பயன்படுத்திக் கவசத்தை முன்னோக்கி நகர்த்தி அக்கரைக்குச் சென்றார். அதைப் பார்த்த வீரர்களும் அதேபோல் ஆற்று வெள்ளத்தைக் கடந்தனர். வெற்றிகளும் தொடர்ந்து வந்தன!

எந்தத் தடையையும் வெற்றி கொள்ள வழி உண்டு; அதை விவேகத்தால் தான் செய்ய முடியும். அந்தத் துணிவும் விவேகமும்தான், அலெக்சாண்டரின் புகழுக்கு அடித்தளமாக விளங்கின.

-பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை

மன ஒருமைப்பாடு!



இளம் வயதிலேயே சிறந்த அறிவாளியாக விளங்கினான் அந்தச் சிறுவன்! ஆனால், எந்த வேலையையும் பொருந்திச் செய்யமாட்டான். அதைக் கண்ட அன்னை மிகவும் வருந்தினார். மகனைத் தம்மருகில் அமர வைத்தார். சில காகிதங்களைத் தரையில் போட்டு, பூதக் கண்ணாடியை வெயிலில் காட்டினார். முதலில் காகிதத்தின் மேல் அங்கும் இங்குமாகக் காட்டினார்.





எதுவும் ஆகவில்லை. சற்று நேரத்துக்குப் பின், பூதக் கண்ணாடியின் ஒளிக் குவி மையம் காகிதத்தின் மேல் படுமாறு காட்டினார். காகிதத்தின் ஒரு முனையில் தீப்பற்றிக் கொண்டது.

இதைப் பார்த்த மகன் ஆச்சரியப்பட்டான். அப்போது அவனது தாயார் கூறினார்: "ஒருமுகப்படுத்திய ஒளிக் கதிர்கள் நெருப்பாகிக் காகிதத்தை எரிக்கும். ஒருமுகப்படுத்தாத கதிர் நெருப்பை உண்டாக்காது. அதுபோல் நீயும் மனத்தை ஒருமுகப்படுத்தினால், எந்த வேலையிலும் வெற்றியடையலாம்."


அதைக் கேட்ட மைந்தன், தனது செயல்களை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்தான். அந்த சிறுவன்தான் பிற்காலத்தில் உலகமே போற்றும் விஞ்ஞானியாக விளங்கி நோபல் பரிசும் பெற்ற சர்.சி.வி. ராமன்.

- எம்.மிருணாளினி,
ஏழாம் வகுப்பு, மதுரை












க			■	சி			
	■	கி			■	ஆ	
	■	■	■		■	■	
	■	■	■		■		னை
■		■				■	■
		■				■	
	■				கு		
			பு	■		■	■









கொடுக்கப்பட்டுள்ள
படங்களைப் பயன்படுத்தி
கட்டங்களை நிரப்புங்கள்.
கட்டங்களில் உள்ள
எழுத்துக்களையும் கவனியுங்கள்!

விடை 69ஆம் பக்கம்





நிரப்புங்கள்!

விஷமக்கார முன்னோர்!

விலங்குகளிலேயே மிகவும் விஷமத்தனம் கொண்டது குரங்குதான். 'குரங்குகளில் இருந்தே மனிதன் தோன்றினான்' என்பது டார்வின் சொன்ன பரிணாமத் தத்துவம்!

பொதுவாக, உயிரினங்களை இரண்டு பெரும் பிரிவாகச் சொல்கின்றன விலங்கியல் நூல்கள். ஒன்று முதுகெலும்பு உள்ளவை; மற்றது முதுகெலும்பு அற்றவை. முதுகெலும்புள்ள பிராணி இனத்தில் முதல் இடம் பெறுவது பிரைமேட்ஸ் (primates) என்ற குரங்கு வகை.

'பிரைமேட் குடும்பத்தில், காலகோ (புஷ்பேபி), லெமூர் குரங்குகள், மனிதக் குரங்குகள் (ஏப்ஸ்). மனிதர்கள் ஆகியவை அடக்கம். வாலில்லாத குரங்குகளையே ஏப்ஸ் என்கிறார்கள். பிரிமேட்ஸ்களில் மிகப் பெரியவை ஏப்ஸ்களும் மனிதர்களுமே. சரித்திர காலத்துக்கு முற்பட்ட யுகத்தில் மிகப் பெரிய குரங்குகள் இருந்திருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்து.


ஐம்பது மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூச்சிகளை உண்டு வாழ்ந்த சிறிய மம்மல்களின் வழித் தோன்றல்களே 'பிரைமேட்டுகள்'.

மனிதக் குரங்குகளும் அவற்றிலிருந்து மனிதனும் தோன்ற 15லிருந்து 20 மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்பது விலங்கியல் நூல் வல்லுனர்களின் கணிப்பு!


குறும்புக்கும் விஷமத்துக்கும் பெயர்பெற்ற மிருகம் குரங்கு. ஏன் நாம் வழிபடும் பெருமைக்குரிய அனுமனும், சுக்ரீவனும்கூட இந்த வகையில் நம் முன்னோர்கள் தானே?!

– எஸ்.தாணு, உ. எண் 286, சாகுபுரம்


* லெமூர்



* கொரில்லா







நான்தான்!?

எழுதுவேன்!?

ஒரு சமயம் சரித்திர ஆசிரியர், பாடம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென்று 'சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களை நட்ட மாமன்னர் யார்?' எனக்கேட்டு, யாரைக் கேட்கலாம் என எங்கள்மீது பார்வையை வீசினார். நம்மைக் கேட்டு விடுவாரோ என ஒரு மாணவன் திரு திருவென விழிக்க, அவனையே பதில் தரச் சொன்னார். அவன்



தவறாக விடையைச் சொன்னான். கோபம் கொண்ட ஆசிரியர், "இந்த ஈஸியான கேள்விக்கே உனக்கு பதில் தெரியலையே, நாளை எப்படிடா பொழைக் கப்போறே?" எனக் கேட்க, அவனோ, "எழுதிப் பொழைச்சுக்குவேன் சார்," என்றான். "எழுதிப் பிழைக்க நீ என்ன இலக் கியவாதியா? சினிமா பாடலாசிரியரா? என்னடா எழுதுவே. எங்கே எழுது பார்க் கலாம்!" எனக் அதட்டினார். உடனே அவன் புஸ்தகத்தின் இடையில் வைத்திருந்த போஸ்ட் கார்டு ஒன்றை எடுத்து விறு விறுவென்று எழுதி, "இப்படித்தான் சார்!" என்று கொடுத்தான். அதைப் படித்த அவர் சிரித்துவிட்டு, பின் எல்லோருக்கும் படித்துக் காட்டினார். அந்த கார்டில்... 'அன்புள்ள அப்பா, இப்பவும் எனக்கு ஸ்பெஷல் ஃபீஸ் கட்டவும் நோட், புக், ஜியாமெட்ரிபாக்ஸ் வாங்கவும் செலவு இருப்பதால் இக்கடி தத்தை தந்திபோல் பாவித்து உடனடியாய் இருநூறு ரூபாய் அனுப்பவும்' என எழுதி யிருந்தான். அதைக் கேட்டு வகுப்பறையே சிரிப்பில் அதிர்ந்தது.

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475, கோபி

குட்டு!

ஒரு சமயம் வகுப்பாசிரியர் அனைவரையும் சுற்றுலாக் கட்டுரை எழுதி வரச் சொன்னார். ஒரு நண்பன் எழுதவில்லை. வகுப்பறை வந்த உடனேயே எல்லாரும் தங்கள் நோட்டை டேபிளில் அடுக்கினர். கணக்கு நோட்டை, அந்த வரிசையில் கீழே வைத்துவிட்டு வந்த என் நண்பன், விறு விறுவென்று கட்டுரையை எழுதி முடித் தான். ஆசிரியர் 'நோட்டை மாத்தி வெச்சுட்டே கட்டுரை நோட்டைக் கொண்டு வா" என்றார். நல்ல பிள்ளையாக, ஒன்றுமே தெரியாதவன்போல அவன் அப்போது எழுதிய நோட்டைத் தர, கட்டுரையைப் படித்த ஆசிரியர், பூஜ்யம் மார்க் போட்டுத் தந்தார். அவன் அதிர்ச்சியோடு "10 மார்க்



போடுவதற்கு 0 மட்டும்தான் போட்டுள்ளீர்கள்'' என்றான். ''ஒண்ணுதானே போடறேன். ஆனா நோட்டில் இல்லை. உன் முதுகுல. என்னையே ஏமாத்தறயா? உன்னோட திருட்டுத் தனத்துக்குத்தான் குட்டு. சமயோசித அறிவுக்கு good'' என பிரச்னைக்கு முத்தாய்ப்பாய்ச் சிரித்தபடியே குட்டு வைக்க, வகுப்பின் சிரிப்புச் சத்தம் அடங்க வெகு நேரமானது.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் 1382, கோபி

''நான்தான்!''


அரையாண்டு விடுமுறை நேரம். ஒரு நாள் என் நண்பர்களுடன் அருகிலுள்ள ஆழம் அதிகம் இல்லாத வாய்க்காலுக்கு குளிக்கச் சென்றேன். அப்போது 'நீருக்குள் நூறு எண்ணும் வரை மூச்சடக்க வேண்டும். மேலே வந்தவுடன் 'நான்தான்' என்று உரக்கத் கத்த வேண்டும்' என்று ஒரு பந்தயம். எனக்கு நீச்சல் தெரியும் என்பதால் சவாலை ஏற்றேன். தண்ணீருக்குள் சென்று 100 வரை எண்ணி வந்து 'நான்தான்' என்று உரக்கக் கத்தினேன். உடனே வாய்க்கால் அதிர வாய்விட்டுச் சிரித்தனர் அனைவரும்! ''ஏன்டா வெற்றிகரமா சவாலை செஞ்சு முடிச்சிருக்கேன். அதைப் பாராட்டாம சிரிக்கவா செய்யறீங்க'' என்று நான் கோபமாய்க் கத்தினேன். சவால் விட்ட நண்பன் விளக்கினான். ''நீ தண்ணீருக்குள் இருக்கும்பொழுது ''உலகிலேயே மிகப் பெரிய முட்டாள் யார்?'' என்று சத்தமாக் கேட்டேன். நீ வேகமா வெளில வந்து 'நான்தான்'னியா? அதான் சிரிச்சாங்க,'' என்றான். வாய்க்காலுக்கு என்னை குளிக்க அழைத்து வந்ததே இந்த கலாட்டாவுக்குத்தான் என்று புரிந்ததும், என்னாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.



- அதிபன் அன்புமணி,
உ. எண் 120,
ஈரோடு

புள்ளிகளை இணையுங்கள்

கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்



அலெக்ஸாண்டரின் ஆசிரியர்!

✱ இவர் கி.மு.384ல் கிரேக்க நாட்டின் 'ஸ்தாகிரா' என்ற ஊரில் பிறந்தவர்.

✱ இவரது தந்தை மிகப் பெரிய செல்வந்தர். பணக்கார மருத்துவர்.

✱ தமது 17வது வயதில் ஏதென்ஸ் நகரம் சென்று பிளேட்டோவிடம் கல்வி கற்றார்.

✱ உயிரியல், இயற்பியல், வேதியியல், கணிதம், தத்துவம் என 400க்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார்.



✱ உயிரின ஆராய்ச்சிகளுக்கு, மாதிரிகளைச் சேகரிக்க மட்டும் இவரிடம் 1000 பேர் வேலை பார்த்தனர். இவர்கள் ஆசியா முழுவதும் சுற்றினார்கள்.

✱ தனது ஆசிரியர் பிளேட்டோ கூறிய சில கோட்பாடுகளையே இவர் மறுத்துள்ளார்.

✱ தாவரம், மற்றும் விலங்கியல் துறை ஆராய்ச்சிகளுக்கு ஓர் அடிப்படையை வகுத்துத் தந்தார்.

✱ இன்று பிரேதப் பரிசோதனை நடக்கிறது. அதற்கு முன்னோடியாக இருந்தவர் இவரே.

✱ இவர் தம் ஆசிரியரின் ஆசிரியருடன் சேர்த்துப் பார்த்தால், உலகளவில் அடுத்தடுத்து புகழ்பெற்று விளங்கிய மூன்று ஆசிரியர்கள் இவர்கள்.

✱ உலக மாவீரனான அலெக்ஸாண்டர் இவரது மாணவர்.

✱ இந்திய மருத்துவத் துறையாளரான நாகதத்தன் அந்நாளில் ஏதென்ஸில் இவரை சந்தித்துப் பேசியுள்ளார்.

இவர் யார் தெரியுமா?

விடை : அரிஸ்டாட்டில்


- ஜி.எஸ்.சபரி, உ. என் 1475, கோபி

கடல் முள்ளம்பன்றி!

மீன் என்று சொன்னவுடன், அழகான துடுப்புகள், செவுள்கள் கொண்டு 'படக் படக்'கென்று துள்ளித் திரும்பும் மீன் களைத்தான் நாம் அறிவோம். அவை தவிர, அபூர்வமான பல மீன் இனங் கள் கடலில் காணப்படுகின்றன. இதோ சில...




* ப்டெரோயிஸ்



* நார்சின்



* கடல் அல்லி



* ஈல்

ப்டெரோயிஸ் (Pterois)

மிக அபூர்வமான மீனினம் இது. முள்ளம்பன்றிக்கு அமைந்தது போல முட் களைப் போன்ற செதில்களைக் கொண் டவை இந்த மீன்கள்! முதுகிலும் துடுப்பு கள் பெற்றுள்ளன இந்த மீன்கள். ஆபத்தில் சிக்கும்போது, இந்த முட்களோடு இணைந் துள்ள பையிலிருந்து விஷ நீரை உமிழ்ந்து எதிரிகளைத் தாக்கும். இத்தன்மையால் இவற்றை 'தேள்மீன்' என்றும் அழைப்பர்.

ஈல் (Eel)

பாம்பைப் போன்ற உடலமைப் புள்ளது ஈல். இது கடலின் மேற்பரப்பில் காணப்படும். இது 'லார்வா' வடிவ இளம் உயிரியாக


இருக்கும்போது, நன்னீர் உள்ள இடத்துக்குப் பெயரும். பின்பு தக்க பருவம் வந்ததும் இனப் பெருக்கம் செய்ய கடல் நீரைத் தேடி வரும்.

நார்சின் (Narcine)

தட்டையான உடலும் அகன்ற தலைப் பகுதியும் ஒடுங்கிய பிற்பகுதியும் கொண்டது இந்த மீன்.

இது எதிரியை அதிர்ச்சியூட்டும், விதத்தில் மின்சாரத் தாக்குதல் தரும். மின்சார உற்பத்தி செய்வதற்கென்றே இதற்கு ஒரு ஜோடி உறுப்புகள் உள்ளன. உணவுக்காக இரைகளைப் பிடிக்கும் போதும் எதிரிகளை வீழ்த்தும் போதும் இவ்வுறுப்பிலுள்ள தசை நார்கள் பேட்டரியைப் போலச் செயல்பட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன!

- ஆர்.ரமேஷ், உ. எண் 1355, கோவை



* திருக்கை மீன்



திருக்கை மீன்

தட்டையான உடலமைப்புக் கொண்ட இந்த மீனுக்கு, துடுப்புகள் இணை குருத்தெலும்பினாலானது. வாலில் முள் போன்ற நீட்சி உள்ளது. அதை வலிமையாக வீசி இரையை அறைந்து மயங்கச் செய்து உண்ணும்! எதிரியிடமிருந்து தப்பிக்கவும் அந்த வாலைப் பயன்படுத்துகிறது. இவற்றில் 500 வகை உண்டு. இவற்றில் சில மின் சாரம் பாய்ச்சும் தன்மை கொண்டவை. வேட்டையாடும் மீனினம் இது!

கடல் அல்லி

இது கடல் நீரில் வசிக்கும் முட்தோலி. ஒரே இடத்தில் ஒட்டிக் கொண்டு வசிப்பது. முன்பகுதியில் வாயைச் சுற்றி பல கைகள் காணப் படுகின்றன. இவை இரையைப் பிடிப்பதற்கும், எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்வதற்கும் பயன்படுகின்றன. இக் கைகள் துழாவித் துழாவி ஒரு நீரோட்டத்தைத் தொடர்ந்து ஏற்படுத்துவதன் மூலம், தம் இரையைப் பிடிப்பதற்கு உதவுகின்றன. அதேசமயம், பாறையில் ஒட்டிக் கொள்வதற்கு ஏற்றவாறு இதன் கீழ்ப்பகுதியிலிருந்து பசை போன்ற ஒரு திரவம் சுரக்கின்றது.

- பொ.கார்த்திகேயன், ஒன்பதாம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, கோவை

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.





விடைகள் : 1.மேகம், 2.நாரையின் கால், 3.ஹெட்ஃபோன், 4.பெண்ணின் கூந்தல், 5.பையில் கார்ட்டூன்

அறிவுரைக்கதை

ஏன் லேட்?

சுற்றுலாவுக்கு வந்த மாணவர்கள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். காட்டுக்குள் புகுந்து புறப்பட்டனர். ஓரளவுக்குப் பாதுகாப்பான பகுதி என்பதால், ஆசிரியர்களும் அவர்களை அனுமதித்தனர். ஆனால், கண்ணன் தனியே ஏதோ செய்து கொண்டேயிருந்தான். அவன் சுபாவமே அதுதான் என்பதால், அவனை யாரும் பொருட்படுத்தவில்லை.

நேரம் ஓடியது. காட்டுக்குள் ஒற்றையடிப் பாதை வழியே வெகுதூரம் நடந்தார்கள். அங்கிருந்த ஓடையில் இறங்கிக் குளித்தார்கள். கொண்டு வந்திருந்த உணவை அருந்தி சற்று நேரம் ஓய்வெடுத்தார்கள் அனைவரும். 'மதியம் நான்கு மணிக்குள் கிளம்பிவிட வேண்டும். அதற்குமேல் தாமதமானால் மிகவும் இருட்டிவிடும்' என்று கிளம்பும் முன்பே அவர்களுக்கு எச்சரிக்கை தரப்பட்டிருந்தது. எனவே, அனைவரும் பரபரவென்று கிளம்பினார்கள்.



நாற்பத்திரண்டு மாணவர்களும் நான்கு ஆசிரியர்களும் வந்த டூர் இது. "எல்லாரும் ஏறியாச்சா? பஸ்ஸை எடுக்கச் சொல்லலாமாடா?" ஆசிரியர் கேட்க, கோரஸாக வந்தது பதில்; "சார், கண்ணன் மட்டும் இன்னும் வரலை!" 'என்ன, வரலையா?' திடுக்கிட்டுப் போனார்கள் ஆசிரியர்கள். பதறிப்போய் அனைவரும் பஸ்ஸிலிருந்து கீழே இறங்கிய வினாடியில், கையில் பெரிய காகித மூட்டையுடன் ஓடி வந்து கொண்டிருந்தான் கண்ணன்.

"சாரி சார். காட்டுக்குள்ள பிளாஸ்டிக் குப்பை சேரக்கூடாது. விலங்குகளுக்கும் ஆபத்துன்னு சொன்னீங்களா! அதான் எல்லாத்தையும் சேகரிச்சு எடுத்துட்டு வர கொஞ்சம் லேட்டாயிடுச்சு. மன்னிச்சுடுங்க சார்!"

பதில் பேச முடியாமல் அவனை அணைத்துக் கொண்டார் ஆசிரியர்.

- அ.வேல்முருகன்,
உ. எண் 951, நம்பியூர்

கம்பீரமான தோற்றம் கொண்ட ஒரு பெண், வலக்கையில் தீப்பந்தத்தை ஏந்தியபடி நிற்கிறாள். இடது கரத்தில் 1776ஆம் ஆண்டு வெளியான ஒரு பிரகடனம் இருக்கிறது. காலடியில் துண்டான சங்கிலிகள். அடிமைத்தளை நீங்கி, விடுதலை வசப்பட்டதன் அடையாளமாகத் துலங்குகிறது இந்தச் சிலை வடிவம். உலகமே போற்றும் சுதந்திர தேவியின் சிலை! இது, அமெரிக்காவின் நியூயார்க் துறைமுகத்தி லுள்ள பெட்லோ எனப்படும் தீவில் இருக்கிறது.

பிரான்ஸ் நாட்டினர் அமெரிக்க ஐக்கிய நாட்டினருக்கு, இரு நாடுகளுக்குமிடையே உள்ள நட்பின் அறிகுறியாக 1884-ல் இச்சிலையை வழங்கினர். அமெரிக்கா விடுதலை அடைந்து நூறு ஆண்டுகள் நிறைவானதையொட்டி 1885 அக்டோபர் 23ல் இச்சிலையின் திறப்பு விழா நடைபெற்றது.

'பிரடரிக் ஆகைஸ்ட் பார்த்தோல்டி' (Frederic Auguste Bartholdi) என்பவர் இந்தச் சிலையை வடிவமைத்தவர். இதனைச் செய்ய இரண்டரை லட்சம் டாலரும், சிலையை தாங்கி நிற்கும் பீடத்தை அமைக்க மூன்றரை லட்சம் டாலரும் செலவாயின! பாரீஸில் உள்ள ஐஃபிள் டவரைக் கட்டிய Gustave Eiffel நிறுவனத்தின் தலைமைப் பொறியாளர் மாரிஸ் கோச்லின் (Maurice Koechlin) என்பவர், இந்தச் சிலையின் உட்புறத்தை வடிவமைத்தார்.



கி.எஸ்.ஸ்ரீமதி, உ.எண் 1382, கோபி

நட்பின் பரிசு!

88 டன் எடையுள்ள 300 செப்புத் தகடுகளை இச்சிலைக்குப் பயன்படுத்தினர். சிலை நிற்கும் அடித்தளம் கருங்கல்லும் கான்க்ரீட்டும் கொண்டு கட்டியது; 42.6 மீட்டர் உயரமுள்ளது! கடல் மட்டத்திலிருந்து 93 மீட்டர் உயரத்தில் இது இருக்கிறது. வலக்கையில் உயர்த்தியுள்ள தீப்பந்தம் இரவிலும் ஒளி வீசும். எனவே இது கலங்கரை விளக்கமாகவும், விமான எச்சரிக்கை விளக்காகவும் பயன்படுகிறது. இது ஆயிரம் ஆண்டுகள் வரை உறுதியாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இந்த சுதந்திர தேவி முதலில் பொன்னிறமாகத்தான் காட்சியளித்தாள். ஆனால் சுமார் 224 கி.மீ. வேகத்தில் வீசும் கடல் காற்றினால், சிலை இப்போது பச்சை நிறமாக மாறியுள்ளது.

இந்தச் சிலையின் தரைப் பகுதியிலிருந்து உச்சி வரை செல்ல லிப்ட் வசதி உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் 20 லட்சம் மக்கள் சுதந்திர தேவியின் சிலையை பார்த்து இரசிக்கின்றனர். வானம் நிர்மலமாய் உள்ள நாட்களில் 24 கி.மீ. சுற்று வட்டாரத்தை (நியூயார்க் சிட்டி, நியூஜெர்ஸி) சிலையின் உச்சியிலிருந்து கண்டு களிக்கலாம். இந்த சுதந்திர தேவி சிலை 1924ல் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.



திறமை

சுட்டீஸ்

கைவண்ணம்!

ப.முத்துலக்ஷ்மி,
நான்காம் வகுப்பு, சுப்பையா வித்யாலயம் நடுநிலைப் பள்ளி, சென்னை





கே.ஆர்.விக்னேஷ்,
இரண்டாம் வகுப்பு, சைல்ட் யேசு நர்சரி & பிரைமரி பள்ளி, சென்னை



எஸ்.பிரகாஷ்,
ஐந்தாம் வகுப்பு, இந்திரா காந்தி மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை



எஸ்.சோலை நாராயணன்,
ஐந்தாம் வகுப்பு, ஜி.கே. ஷெட்டி விவேகானந்தா வித்யாலயா, சென்னை



பி.கமலா தேவி,
ஐந்தாம் வகுப்பு, மவுண்ட் மெட்ரிக் பள்ளி, திருவண்ணாமலை

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!



1576. பு.அரவிந்தன், எட்டாம் வகுப்பு, சர்லைட் உயர்நிலைப்பள்ளி, கோட்டுச்சேரி
1577. எஸ்.சோலை நாராயணன், ஐந்தாம் வகுப்பு, ஜி.கே.சி.டி. விவேகானந்தா வித்யாலயா, அம்பத்தூர்
1578. த.சு. பிரசன்னா, ஆறாம் வகுப்பு, விவேகானந்த வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, திருப்பராய்த்துறை
1579. இரா.வீரமோகன், ஏழாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரியலூர்
1580. எம்.சூரியபாரதி, பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1581. வெ.ரவி, பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1582. த.புஷ்பா, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம்
1583. ர.சுரேகா, ஏழாம் வகுப்பு, தர்மமூர்த்தி மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்
1584. எஸ்.ஜெகன்பாலாஜி, பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1585. வி.வர்ஷினி, முதல் வகுப்பு, அன்னை சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, ஆற்காடு
1586. எம்.என்.ஸ்ரீகாந்த், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீசத்யசாய் இன்ஸ்டிட்யூட் ஆஃப் எஜுகேர், சென்னை
1587. சி.தயாளன், பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1588. எஸ்.அபிராமி, ஏழாம் வகுப்பு, ஓ.பி.சி.எம். பெண்கள் மே.நி. பள்ளி, மதுரை
1589. சி.விக்னேஷ், ஏழாம் வகுப்பு, இ.ஆர்.கே. மேல்நிலைப் பள்ளி, தர்மபுரி
1590. எஸ்.மானஸா, ஐந்தாம் வகுப்பு, குறிஞ்சி மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்

1591. அஜோ, நான்காம் வகுப்பு, புனித ஜேம்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, ஸ்ரீவைகுண்டம்

1592. ஆரோக்கிய ஆனந்தி, ஏழாம் வகுப்பு, ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீவைகுண்டம்

1593. ஏ.திவாகர், நான்காம் வகுப்பு, தி.தி.அ.க. தொடக்கப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்

1594. மு.மணிகண்டன், நான்காம் வகுப்பு, இ.ஆர்.கே. மேல்நிலைப் பள்ளி, தர்மபுரி

1595. ஜே.சாய்ராம், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீகிருஷ்ணசாமி மே.நி. பள்ளி, சென்னை

1596. மரிய ஜேம்ஸ் அன்பு, நான்காம் வகுப்பு, தி.தி.அ.க. தொடக்கப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்

1597. கே.ஆர்.ரட்சிகா, முதல் வகுப்பு, லட்சுமி பள்ளி, மதுரை

1598. கு.கௌரி பவானி, ஏழாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, விளாத்திகுளம்

1599. தி.மு.மதுவந்தன், முதல் வகுப்பு, அகிலாண்டேஸ்வரி வித்யாலயா, திருச்சி


1600. கோ.சங்கீதா, பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

1601. க.ராஜகணபதி, பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, குருவரெட்டியூர்

1602. ஏ.கமல், ஏழாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம்

1603. இரா.லோகன், ஏழாம் வகுப்பு, வேலூரடையார் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்

1604. ஆர்.கார்முகிலன், ஆறாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், திருவண்ணாமலை



1605. ஜே.அஸின், ஒன்பதாம் வகுப்பு, நா.நி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கம்பம்

1606. ப.மகரசூரியபாலன், நான்காம் வகுப்பு, ஸ்ரீவி அரிமா பள்ளி, ஸ்ரீவில்லிப்புத்தூர்

1607. எஸ்.ஸ்டீபன் ராஜ், பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, சென்னை

1608. எஸ்.சூரியா, ஐந்தாம் வகுப்பு, குறிஞ்சி மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்

1609. டி.அனிஷியா, பத்தாம் வகுப்பு, கல்யாணம் மகளிர் மேல்நிலைப் பள்ளி, சென்னை

1610. ஆர்.ஆஷிக், ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி

1611. டி.சார்லஸ், பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, சென்னை

1612. பி.கோவர்தனன், ஏழாம் வகுப்பு, வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, கோவை

1613. கு.கீர்த்தனா, எட்டாம் வகுப்பு, பாரதியார் மெட்ரிக் மே.நி. பள்ளி, கூடுவாஞ்சேரி

1614. இரா. மீனா, எட்டாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம்

1615. வி.பவித்ரா, முதல் வகுப்பு, வள்ளல் சபாபதி மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1616. இரா. அரவிந்த், ஒன்பதாம் வகுப்பு, வே.வ.ந.தி.மு. ஆங்கிலப் பள்ளி, வேலூர்
1617. ச.ஜெகசிற்பி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீமகரிஷி வித்யா மந்திர், திண்டுக்கல்
1618. பி.பிரீத்தி, முதல் வகுப்பு, வள்ளல் சபாபதி மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை
1619. ச.கிஷோர்குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீவிவேகானந்தா வித்யாவனம், திருப்பராய்துறை
1620. வே.சதீஷ், ஆறாம் வகுப்பு, ஸ்ரீவிவேகானந்தா வித்யாவனம், திருப்பராய்துறை
1621. கே.வி.விஷ்ணுபிரியா, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீவிஜய் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, ஓசூர்
1622. ச.திவ்யா, மூன்றாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, உத்திரமேரூர்
1623. கே.ஆஷாதீப், ஏழாம் வகுப்பு, தம்பு மேல்நிலைப் பள்ளி, கோவை
1624. ச.ர.மயூரன், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீவிஜய் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, ஓசூர்
1625. த.உ. ஷிவானி, மூன்றாம் வகுப்பு, சபரி அகாடெமி, கரூர்

வசந்தராசன்

"சார்... நான் பாக்கறதுக்கு அசிங்கமா இருக்கேன்னு ரேவந்த் கேலி பண்றான்."

தேம்பித் தேம்பி அழுதுகொண்டே சொன்ன முரளியை வருத்தத்தோடு பார்த்தேன்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகச் சேர்ந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. தினமும் இதே புகார்தான்.

இந்த மாணவர்களை எப்படித் திருத்துவது? கேலி செய்யும் மாணவர்களை திட்டிப் பார்த்தேன். தண்டித்துப் பார்த்தேன். எந்தப் பலனுமே இல்லை.

முரளி பார்ப்பதற்குச் சற்று சுமாராக இருப்பான். கரிய நிறம். பெரிய மூக்கு. குள்ளம் வேறு. பருமனான உடல் வாகு, அவனை மேலும் குள்ளமாகக் காட்டும். ஆனால், படிப்பில் நல்ல சுட்டி. அடக்கமான பையன். ஆசிரியர்களிடம் மிக மரியாதையாக நடந்து கொள்வான்.

ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் பல மாணவர்கள், முரளியை சீண்டிக் கொண்டே இருந்தார்கள். அவனை எந்த விளையாட்டிலும் சேர்த்துக் கொள்வதில்லை. அவனைப் பார்த்தாலே கிண்டல், கேலி... இவர்களை எப்படித் திருத்துவது?


"சார்... உங்களை எச்.எம். கூப்பிடறார்."

பியூனின் குரலில் என் சிந்தனை கலைந்தது.

தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்றேன்.

"மிஸ்டர் சங்கர். இங்கிருந்து இருபது மைல் தொலைவுல பழைமையான சோழர் காலத்திய கோயில் இருக்கு. அதுக்கு பக்கத்துல அழகான ஆறு ஓடுது. அடுத்த வாரம் நாம் அங்கே மாணவர்களைக் கூட்டிட்டுச் சுற்றுலா போகப் போறோம். ஒவ்வொரு மாணவனும் பஸ் சார்ஜுக்குப் பத்து ரூபாய் கொடுத்தால் போதும். உங்க கிளாஸ் மாணவர்கள் கிட்ட சொல்லி வர்றவங்ககிட்டே பணத்தை வாங்கி வைங்க."

"எஸ் சார்..." என்றேன், சுற்றுலா எதிர்பாராத ஒரு பலனைக் கொடுக்கப் போகிறது என்ற உண்மை தெரியாமல்.



சுற்றுலா நாள்.

என் வகுப்பில் மொத்தம் இருபது பேர்; பள்ளி முழுக்க மொத்தம் எழுபது பேர் வந்திருந்தார்கள். கோயில் பாழடைந்து இருந்தாலும், பார்க்க அழகாக இருந்தது. சுற்றிப் பார்த்தோம். கோயிலுக்குச் சற்று தூரத்தில் இருந்த ஒரே ஒரு மரம் மட்டும் சிறிய கிளைகளுடன் சற்றுப் பருத்து குட்டையாக இருந்தது.

"இந்த மரத்தைப் பார்த்தா முரளி மாதிரியே இல்லை..."

ஒரு மாணவன் முணுமுணுத்தது என் காதுகளில் விழுந்தது. முரளியின் முகத்தைப் பார்த்தேன். அவன் விழியோரங்களில் கண்ணீர்த்துளிகள்.

கொஞ்ச நேரம் கழித்து நான் என் வகுப்பு மாணவர்களை மட்டும் அழைத்துக் கொண்டு புதிய இயற்கைக் காட்சிகளைப் பார்க்க நடக்க ஆரம்பித்தேன்.

அரை மணி நேரம் நடந்திருப்போம்.

வானம் இலேசாகக்

ஆண்டவன் படைப்பில் எல்லாமே அழகுதான். எதை அழகில்லை என்று நினைக்கிறோமோ, அதுவே நமக்கு உதவியாக இருக்கும்.



போதிமரம்!

கருக்கத் தொடங்கியது.

சற்று நேரத்தில்... மழை சடசடவெனப் பெய்ய ஆரம்பித்தது. ஒதுங்கக்கூட இடம் இல்லை. என்ன செய்வது? வேகமாகத் திரும்பி, கோயிலை நோக்கி ஓட ஆரம் பித்தோம். மழை விடவில்லை.

அப்பொழுதுதான் அந்த விகார மரம் கண்களில் பட்டது. எல்லோரும் அதன் அடியில் நின்றோம். இப்பொழுது மழைத் துளிகள் எங்கள் மேல் விழவில்லை. நான் மாணவர் களைப் பார்த்தேன். முரளியைத் தவிர, மற்றவர்களின் தலை கள் கவிழ்ந்திருந்தன.

''பார்த்தீர்களா இந்த மரத்தை அழ கற்ற மரம் என்று கேலி செய்தீர்கள். ஆனால் இந்த மரம்தான் நமக்கு இப்பொழுது உதவி செய்கிறது. ஆண்டவன் படைப்பில் எல்லாமே அழகு தான். அழகு இல்லை என்று நாம் நினைப்பதால் எதையும் ஒதுக்கிவிடக்கூடாது. தோற்றம் என்பது இயற்கையின் வரம். அதைத் தாண்டிய அழகு ஒவ் வொன்றிலும் உண்டு; ஒவ்வொருத் தரிடமும் உண்டு. இதை எப்போதும் நினைவில் வையுங் கள்'' என்றேன்.

மாணவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள். பத்து நிமிடங்களில் மழை விட... நடக்க ஆரம்பித்தோம். ஏதோ சிரிப்புச் சத்தம் கேட்க, பின்னால் மெல்லத் திரும்பிப் பார்த்தேன்.

முரளியை - அழகற்ற மரத்தோடு ஒப் பிட்ட மாணவன், முரளியின் தோள் மேல் கைகளைப் போட்டுப் பேசியபடியே நடந்து வந்து கொண்டிருந்தான். இப்போது எனக்கு அந்த மரம் போதிமரமாகத் தெரிந்தது.



நார் வீடு!

கொட்டிக் கிடக்கும் சருகு, பஞ்சு,
நாரிலே - குருவி
கூடு கட்டும் அழகைப் பாரு
தோப்பிலே!

கொத்து இல்லை! தச்சு இல்லை!
வீடுதான் - அதன்
குரடு போன்ற மூக்கு கட்டும்
கூடுதான்!

சின்னச் சின்ன இழைகள்
தாங்கும்
சுற்றியே! - உள்ளே
செத்தை கொண்டு செய்துவைத்த
மெத்தையே!

கண்ணைக் கவரும் வண்ணக் கூடு
சிறியதே! - அதைக்
கட்டி முடித்த குருவி ஆற்றல்
பெரியதே!

கீச் கீச் என்று சின்னக் குஞ்சின்
கூச்சலே - மரம்
காற்றில் ஆடப் பயந்து பாடும்
இன்னிசை!

கூடு கட்டக் குருவி கற்றது
யாரிடம்? - அந்த
குருவைச் சொல்ல பதிலே இல்லை
நம்மிடம்!

- பி.புலேந்திரன், திருவாரூர்

மரம் தரும் லட்டு!

நாட்டுக் கொய்யா பாருங்க
நாவில் ஊறும் நீருங்க
அம்மா செய்த லட்டுபோல்
மரம் கொடுக்கும் லட்டுங்க!

இனிப்புச் சுவையை நாவிலே
இனிதாய்த் தரும் உண்மைங்க
கேடு இல்லாப் பழமுங்க
கேட்டு வாங்கி உண்ணுங்க.

கடலின் சிரிப்பு!



கடற்கரைக்குப் போகலாம்
காலாற நடக்கலாம்
கரும்பலகை அழித்திட
கடல் நுரையை எடுக்கலாம்.

பலூன் வாங்கி வெடிக்கலாம்
பட்டாணி சுவைக்கலாம்
பட்டம்விட்டு மகிழலாம்
பத்தை மாங்காய் ருசிக்கலாம்.

மணலில்வீடு கட்டலாம்
நண்டு பின்னே ஓடலாம்
மதுரைவீரன் போலவே
குதிரையேற்றம் செய்யலாம்.

கடலதனின் சிரிப்புபோல்
கலகலக்கும் அலையொலி!
ஓடிவந்து நீயும்பார்!
ஆடிக் களித்து மகிழவே!

- சரஸ்வதி ராசேந்திரன், மன்னார்குடி

கவிதைப் பூங்கா



குறைந்த விலையில் வாங்கலாம்
கூடித் தின்று மகிழலாம்
நலமாய் நாமும் வாழவே
நாட்டுக் கொய்யா உதவுங்க!

பகலில் அணிலே பங்காளி
இரவில் வௌவால் கூட்டாளி
இவற்றின் பசியைத் தணித்த பிறகும்
இருக்கும் பழங்கள் நமக்கன்றோ!

- மு.நடராசன்,
புதுச்சேரி



வரைந்து பாருங்கள்!

வழங்குபவர் : எஸ்.வஜ்ரவேலு


அறிவுச் சோலை!

பவளம் தந்த பரிசு

ஆசிரியர் : ரேவதி, வெளியீடு : பழனி யப்பா பிரதர்ஸ், 'கோனார் மாளிகை' 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600014. விலை ரூ.50/-

பரிசு என்னும் சொல்லில் முடியும் ஐந்து சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. கோகுலத்தின் சிறப்பாசிரியராக விளங்கிய டாக்டர் ஈ.எஸ்.ஹரிஹரன், ரேவதி என்னும் புனைபெயரில் எழுதியுள்ள கதைகள். படக்கதை வடிவில் கோகுலத்தில் இடம் பெற்ற இந்தக் கதைகள், சிற் சில மாற்றங்களுடன் எழுத்து வடிவில் வெளி வந்துள்ளன. நல்ல எண் ணங்கள், நல்ல பண்பு கள்... இவைதான் நல்லவர்களாக ஒவ்வொரு வரையும் உருவாக்குகின் றன. பாட்டுக்கு வரி கட்டச் சொல்லும் மன்னனை மாற் றும் புத்திசாலிப் பெண், தனக்குத் துன்பம் இழைத்த மந்திரவாதிக்கும் உதவ முற் பட்ட வாசுகி... என்று அருமை யான கதாபாத்திரங்கள் வாயிலாக, அடிப்படைப் பண்புகளின் அவசியத்தை அழகுற விவரித்திருக்கிறார் ஆசி ரியர். அந்த வகையில், குழந்தைகள் மட்டுமல்ல; பெரியவர்களும் படித்துப் பயன்பெற வேண்டிய அறிவுச் சோலை இது!





மத்தாப்பூ

சிறுவர் பாடல்கள். ஆசிரியர் : சுப்ர.பாலன், வெளியீடு : வானதி பதிப் பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017

குழந்தைகள் பாடக்கூடிய எளிய சந்தம், அழகான ஓவியங்கள்... என்று 45 சிறுவர் பாடல்களைக் கொண்டிருக்கிறது இந்தப் புத்தகம். தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்ற இந்த நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள், கோகுலம் உள்பட பல்வேறு சிறுவர் பத்திரிகைகளில் வெளியானவை. சில, கர்நாடக அரசு தயாரிக்கும் தமிழ்ப்பாட நூல்களில் இடம் பெற்றவை. தற்போது நகர்ப்புறக் குழந்தைகள் பார்க்க வியலாத 'தாத்தாப்பூச்சி' ஒரு சுவாரஸ்யம்:


எங்கெங்கேயோ நான் பறந்து
இளைத்துக் களைத்து இறங்குகையில்
தங்கும் விதையாய் உடல் மட்டும்;
தலையின் பஞ்சோ பறந்துவிடும்;

அறிவியலோடும் அழகியலோடும் விஷயங்களை உணர்த்தும் விதம் ஜோர்!

- ராகவன்

'ஆரஞ்சு நிலாவில் ஆடிப் பாடுவோம்'னு யாராவது பாட்டெழுதினா ஆச்சர்யப்பட வேண்டாம். ஏன்னா, சனிக்கிரகத்தின் நிலவான டைட்டனைதான் 'ஆரஞ்சு நிலா'ன்னு குறிப்பிடுறாங்க. எதிர்காலத்தில் இந்த நிலவில் குடியேற

வானியல்




* சூரியக் கரும்புள்ளிகள்

வாய்ப்புகள் அதிகமாம். அமெரிக்காவைச் சேர்ந்த வானியல் பொறியாளர் ராபர்ட் சுப்ரின் ''டைட்டன் மனித வாழ்க்கைக்கு ஏற்றதாக விளங்குகிறது. இதன் சுற்றுப் புறத்தில் அதிக அளவில் நைட்ரஜன் மற்றும் மீத்தேன் ஆகியவை காணப்படுகின்றன. மேற்பரப்பில் நீர், அம்மோனியா, திரவ மீத்தேன் இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே, நீரில் இருந்து ஆக்சிஜனை தயாரிக்கலாம். நைட்ரஜன், மீத்தேன் மற்றும் அம்மோனியாவைக் கொண்டு உரங்களைத் தயாரித்து உணவு வகைகளை உற்பத்தி செய்ய முடியும்''னு சொல்றாரு. அட! அடுத்த பூமி!

விண் தூசு

விண்வெளிக்குள்ளும் தூசுகள் காணப்படுகின்றன. இவற்றை 'விண் தூசு' என அழைக்கின்றனர். ஆங்கிலத்தில் 'காஸ்மிக் டஸ்ட்' அல்லது 'ஸ்பேஸ் டஸ்ட்'. இவை கோள்களுக்கிடையேயும் காணப்படுகின்றன. சூரிய ஒளி படுகின்றபோது இவை ஒளிர்கின்றன. கோள்களைச் சுற்றிக் காணப்படும் வளையங்களுக்கு இந்த விண் தூசுகளே காரணம்.



சனிக் கிரகத்தைச் சுற்றிக் காணப்படும் வளையங்கள் இவ்வாறு தோன்றியவையே. இவற்றை ஆராய்வதற்கு என்றே, யுலிசிஸ், காசினி, யுரோபா, ரோஸட்டா போன்ற விண்கலங்கள் தற்போது வலம் வருகின்றன. தூசு


...மெட்டரா இது?

முனைவர் ஆகுரா

சூரியக் கரும்புள்ளி


ஒளிப்பிழம்பாய் விளங்கும் சூரியனுக்குள்ளும் ...ரும்புள்ளிகள் இருக்கின்றன. இவற்றை 'சன் ஸ்பாட்ஸ்' ...ன அழைக்கின்றனர். 1610ஆம் ஆண்டு ஆங்கில ...னவியலாளர்கள் 'தாமஸ் ஹரியட்' மற்றும் 'ப்ரிசியன்' ஆகியோர் தொலைநோக்கி வழியாக சூரியக் கரும் ...ுள்ளிகளை முதன் முதலாகக் கண்டனர். இந்தக் ...ரும்புள்ளிகள் காந்த விசையின் பாதிப்பினால் தோன்றி ...வை. இவை சூரியனின் மேற்பரப்பில் சுமார் ...0,000 கிலோ மீட்டர் தூரம் வரை விரிவடையலாம் ...ன்கின்றனர். அப்போது தொலைநோக்கியின்றி ...வெறுங்கண்ணால் பார்க்க முடியுமாம். அதுங்க பெரும்

* சனி கிரகம்



* கலிலியோ





புள்ளிகள்தான் போங்க!

ஆரஞ்சு நிலா!

கலிலியோ நிலாக்கள்!

அறிவியலின் தந்தை, நவீன உற்றுநோக்கு வானவியலின் தந்தை எனப் பல்வேறு அடைமொழிகளுக்குச் சொந்தக்காரர் கலிலியோ. இவரைப் பெருமைப்படுத்தும் விதமாக, வியாழன் கோளின் நான்கு முக்கிய துணைக் கோள்கள் 'கலிலியோ நிலாக்கள்' என அழைக்கப்படுகின்றன. சூரியனை மையமாகக் கொண்டு பிற கோள்கள் சுற்றி வருகின்றன என்னும் கோப்பர்நிக்கஸ் கருத்தைப் பகிரங்கமாக ஆதரித்தார் கலிலியோ. மதவாதிகளின் எதிர்ப்பால் அரசாங்கம் இவரை வீட்டிலேயே சிறை வைத்தது. 1609ஆம் ஆண்டு கலிலியோ முதன் முறையாகத் தொலைநோக்கி வாயிலாக, நிலா, நிலவிலுள்ள மலைகள், மேடுகள் மற்றும் வியாழனைச் சுற்றியுள்ள நிலாக்களைக் கண்டார். இதைக் கண்டறிந்த 400வது ஆண்டைக் கொண்டாடும் விதமாக 2009ஆம் ஆண்டைச் சர்வதேச வானியல் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

அம்மாவின் ஆசி!

"அக்கா, இன்னிக்கு தேவலோகத்துல விருந்து. உன் பிள்ளைகளையும் கூட்டிட்டுப் போகட்டுமா?"

தம் அக்காவான நட்சத்திரத்திடம், அவளது சகோதரிகளான இடியும் மின்னலும் கேட்டனர். சற்று யோசித்த நட்சத்திரம் 'சரி' என்றது. சிறுவர்களான சூரியன், சந்திரன், காற்று மூவரும் உற்சாகமாகப் புறப்பட்டனர்.

விருந்து அமர்க்களமாக நடந்தது. சூரியன், சந்திரன், காற்று மூவரும் மிகவும் சந்தோஷமடைந்தனர். விதவிதமான உணவு வகைகளை உண்டு மகிழ்ந்தனர் அலங்காரங்களைக் கண்டு களித்தனர் நேரம் கடந்தது. விருந்து முடிந்ததும் அனைவரும் கிளம்பினர்.

குழந்தைகளை எதிர்பார்த்து வீட்டு வாசலிலேயே காத்திருந்தாள் அம்மா நட்சத்திரம்! 'அம்மா' என்று கூவியபடியே ஓடிவந்த குழந்தைகளை வாரி அணைத்து மகிழ்ந்தாள். பிறகு மூத்தவனான சூரியனிடம் கேட்டாள் : "ஏன்டா,



னக்காக என்ன கொண்டு வந்தே?"

சூரியன் சூடாகச் சொன்னான் : "அங்க போனப்புறம் நான் உன்னை நினைக்கவே இல்லை. ஜாலியா விளையாடினேன். ஸ்வீட்டெல்லாம் சாப்பிட்டேன். எதுவுமே எடுத்துட்டு வரலை. அப்டில்லாம் எடுத்துட்டு வரமுடியுமா?"

அடுத்த மகனான காற்றிடம் கேட்டாள் நட்சத்திரம்.

"என்னம்மா இப்படிக் கேட்கிறே? போகிற இடத்துல இருந்ததெல்லாம் உனக்கு எடுத்துட்டு வர முடியுமா? அதையெல்லாம் எதிர்பார்க்காதே. அப்படிச் செய்ய முடியாது. ஜாலியா விளையாடப் போன இடத்துல உன்னைல்லாம் நினைக்க முடியாது" என்றான் இரண்டாம் மகனான காற்று.

என்றாலும், அம்மா மூன்றாவது மகனிடம் கேட்டாள். உடனே, தன் கையிலிருந்த துணி முடிப்பைக் கொடுத்தான் சந்திரன். அதில் அவனுக்கு பரிமாறப்பட்ட உணவு வகைகளில் இருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து வைத் திருந்தான். அதை எடுத்து ஊட்டியும் விட்டான்.



அம்மா நட்சத்திரத்தின் கண் கள் கலங்கின.

"செல்லம், உனக்குச் சாப்பிடக் கொடுத்ததில் இருந்து, எனக் குன்னு எடுத்து வெச்சு கொண்டு வந்தாயே. இதுவே எனக்குப் போதும். என் மனம் குளிர்ந்து போச்சு" என்று சொல்லி, சந்திரனைத் தூக்கி அணைத்துக் கொண்டாள்.

பின்பு சூரியனிடம், "சின்ன சந்தோஷம் வந்தவுடனே அம்மாவை மறந்துட்டியே... இது தப்பு இல்லியா? அதனால நீ எப்பவுமே சூடாத்தான் இருப்பே!" என்றாள்.

பிறகு காற்றிடம், "அம்மாவிடம் 'எதிர் பார்க்காதே'ன்னு சொன்னியே. அந்தச் சலனம் உனக்கு நிரந்தரமா இருக்கும். நீ எப்பவும் ஒரு இடத்துல இல்லாம சுத்திட்டேயிருப்பே!" என்றாள்.

சந்திரனிடம், "மகனே. விழாவில் கலந்து கொள்ளச் சென்றபோதும், என்னை மறக்கவில்லை; உணவருந்தும் நேரத்திலும் என்னை மறக்காமல், எடுத்து வந்தாய். இப்படி எந்த நிலையிலும் தன்னை மறக்காத இயல்புதான் என்றும் சிறப் பினைப் பெறும். அவ்வளவு சிறப்புடைய நீ, உலகில் அனைவராலும் விரும்பப்படு வாய். நீயும் குளிர்ந்திருப்பாய்" என்று ஆசி கூறினாள்.

அட... அம்மாவின் ஆசிதான் சந்திரனை இப்படிக் குளிர வைத்திருக்கிறதோ! ●

44ம் பக்க புதிருக்கான விடை

க	ர	டி		சி	ங்	க	ம்
ங்		கி	ளி	று		ஆ	டு
கா				த்			யா
ரு				தை		பூ	னை
	மீ		அ	ணி	ல்		
மா	ன்		க	ழு	கு		நா
டு		வ	ரி	க்	கு	தி	ரை
க	ரு	ம்	பு		டை		

ஸ்ரீராம், ஏழாம் வகுப்பு, நப்பின்னை மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை



''ஒரு 'கப்பல்' வாங்கணும்னா முதலில் என்ன செய்யணும்?''

''நிறையப் பணம் சம்பாதிக்கணும்.''

''இல்லை 'பல்' டாக்டர்கிட்டே ஒரு 'கப்'பைக் கொடுத்து வைக்கணும்.''



''டாக்டர்! பல்லெல்லாம் ஒவ்வொண்ணா விழுந்துகிட்டு வருது. என்ன செய்ய?''

''விழுந்த பல்லை என்ன செய்ய? தூக்கி எறிய வேண்டியதுதான்!''



''பல் மருத்துவமனைக்கு எப்படிப் போகணும்?''

''சொத்தையோடதான்.''

– ஆ.விஜயலக்ஷ்மி,
திருநெல்வேலி



''அதோ போறாரே! அவர் விரல்விட்டு எண்ணக்கூடிய கணித மேதைகளில் ஒருவர்.''

''கணித மேதைங்கிற.. அப்புறம் ஏன் விரல்விட்டு எண்ணுறாரு?''

''வானமும் கடலும் ஏன் நீலமாக இருக்கிறது?''
''நீலம்கறது அதுங்களோட யூனிஃபார்ம் மிஸ்.''



''தமிழ் இலக்கணத்துல 'மாத்திரை' இருக்குல்லே சார்..''
''ஆமா...''
''அது காலாவதி ஆனதா... ஆகாததா..?''



'பல்'லவர்களின் எதிரி?

'' 'பல்'லவர்களின் எதிரி யார்..?''
''பொக்கையர்கள்தான்.''

– ஜே.தனலக்ஷ்மி, கோவை



– ஜி.சிந்தியா,
ராஜபாளையம்





• தேவதைச் சுறா

கடல் துறவி!

சுறாமீன் என்றவுடன், கூர்மையான பற்களுடன் வாய் பிளந்தபடி வரும் தோற்றம் பலருக்கும் நினைவுக்கு வரும். ஆனால், இவற்றில் 300க்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. இந்த சுறாக்களில், 30 வகைச் சுறாக்கள் மட்டுமே மனிதனைத் தாக்குபவை என்பது ஆச்சரியம். இவற்றின் உடல், வளையக் கூடிய குருத்தெலும்பினால் ஆனது.

இவற்றுக்கு மிகச் சிறந்த மோப்ப சக்தி உண்டு. உதாரணமாக, பத்து லட்சம் துளிகளில் ஒரு துளி ரத்தம் கலந்திருந்தால்கூட, அதைச் சுறா மோப்பம் பிடித்துவிடும். அதுவும், சுமார் ஒன்றரை கி.மீ. தொலைவிலேயே ரத்தத்தை இனங்கண்டு விடும் ஆற்றல் கொண்டது சுறா.


ஜெர்மன் மொழியில் 'ஷார்க்' என்றால் 'மிகக் கொடிய' என்று பொருள். அச்சம் தரும் பெரிய தோற்றத்தாலும், தாக்குவதாலும் இந்தப் பெயர் உண்டானது போலும். இதன் கல்லீரலில் உள்ள எண்ணெய்ப் பொருள், மருத்துவ குணம் கொண்டது. வைட்டமின் ஏ மற்றும் டி சத்து கொண்டது. தவிர, மரத்தால் செய்யப்பட்ட பொருட்களைப் பளபளப்பாக்க சுறாவின் தோல் பயன்படுத்தப்படுகிறது. இதனால், பெருமளவில் சுறாக்கள் வேட்டையாடப்படுகின்றன.

இவற்றில், தேவதைகளுக்குக் காணப்படும் இறக்கைகள் போன்ற மிக நுண்ணிய செதில் அமைப்புக் கொண்ட சுறாவுக்கு 'தேவதைச் சுறா' என்று பெயர். தேவதைச் சுறாக்கள், மாங்க் (துறவி) போல் தோற்றம் அளிக்கும். இவற்றின் தலை அமைப்பு, கழுத்தையும் தலையையும் மூடிய துறவியின் அங்கியின் அமைப்பை ஒத்திருக்கும். அதனால் 'மாங்க் (monk) மீன்கள்' என்றும் இவற்றை அழைப்பர்.

'போர்ட் ஜாக்சன்' (port jackson) என்னும் சுறாதான், 'பன்றிச் சுறா' என்றும் 'புல்டாக் சுறா' என்றும் அழைக்கப்படுகிறது. கவிழ்ந்த தலையும், குவிந்த மூக்கும் கொண்டது இந்தச் சுறா. கடல் விலங்குகள் மற்றும் மீன்களை மோப்பம் பிடிக்க பெரிய துளைகளும் இதற்கு உண்டு. 'ஒபிகாங் சுறா' தன்னை அடையாளம் தெரியாத படி செய்து கொள்வதில் திறமைமிக்கது. கடல் படுகையின் அமைப்பை ஒத்தபடி இதன் வண்ணமும், தட்டையான உடலும், இருக்கும் என்பதால் எளிதில் அடையாளம் காணமுடியாது.

வீக்சு சுறா எதிரியால் தாக்கப்பட்டால், உடனே ஏராளமான கடல் நீரை விழுங்கி பலூனைப் போல் வீங்கிவிடும். பின் எதிரி வர முடியாத பாறை இடுக்கில் தன்னைப் புகுத்திக் கொள்ளும்.

மனித வேட்டையாடும் வெள்ளைச் சுறா, கொம்பன் சுறா... என்று அச்சுறுத்தும் பிரம்மாண்டங்கள் உலவும் கடலில்தான், நம் நண்பர்களும் இருக்கிறார்கள். ஆம்; மனிதர்களின் நண்பர்களாக விளங்கும் டால்ஃபின்களும்கூட, கடலின் வசீகரிக்கும் குழந்தைகள்தானே!



* டால்ஃபின்கள்




எஸ்.தாணு,
உ.எண் 286, சாகுபுரம்.

* போர்ட் ஜாக்சன்


ஆதி
கதை, படம் : பிள்ளை
தன்னைப் பெருமையாகக் கருதும் அலட்டல் பாம்பு ஆதி. ஒருநாள்...
ம்... அமேசான் காட்டுலே இருக்க வேண்டிய நான் இங்க இருக்கேன்.
பொழுதே போகலியே. என்ன யாரையுமே காணோம்.
அதோ ஜம்பு வரான்... கலாய்ச்சா பொழுது போகும்...
ஜம்பு... ஒரு நிமிஷம் இங்கே வாயேன்!
வெட்டிப் பேச்சு பேச நேரமில்லை. டக்குனு சொல்லு. என்ன விஷயம்?
மனசுக்குள்ள உனக்கு ஒபாமான்னு நினைப்பா?
சரி... சரி... சீக்கிரம் சொல்லு.
நீ ஓடற மாதிரி சொல்றேன் பாரு


இப்ப நான் செய்யறதைப் பாரு.
தென்னை மரத்தில் ஏறியது ஆதி.
ஏதோ வம்பு மாதிரி தெரியுதே?
இந்த மாதிரி உன்னால தேங்காயைத் தொட முடியுமா?
அப்படியா விஷயம்? இப்ப பாரு...
ஜம்பு மரத்தை உலுக்க... அதிலிருந்து விழுந்த காய்
ஆ
இன்னும் எவ்வளவு தேங்காய் தொடணும் ஆதி?
போ.. வேலை இருக்குன்னு சொன்னியே... வெட்டியாய் நிற்காதே!

கோடைக்கு ஏற்ற



கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருக்கிறது. சூரியனின் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க நம் உடலின் வெப்பமும் அதிகரிக்கிறது. அப்போது மூளையில் உள்ள 'ஹைப்போதலாமஸ்' எனும் பகுதி, நமக்கு வியர்வையைப் பெருமளவில் சுரக்கச் செய்து, உடலின் இயல்புக்கு மீறிய வெப்பத்தை வெளியேற்றுகிறது.

என்றாலும் இந்த முயற்சிக்கும் ஓர் எல்லை உண்டு. அக்னி நட்சத்திர வெயிலின்போது, 'ஹைப்போதலாமஸ்' தன்னுடைய முயற்சியில் தோற்றுப் போகிறது. அப்போது பல வெப்ப நோய்கள் நமக்கு ஏற்படுகின்றன.

வியர்க்குரு : வெயில் ஏற ஏற உடலில் வியர்வை அதிகமாகச் சுரக்கும். அப்போது தோலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளில் அழுக்கு சேர்ந்து அடைத்துக் கொள்ளும். அதனால் 'வியர்க்குரு' வரும். வெயில் காலத்தில் தினமும் இரு வேளை குளித்தால் வியர்க்குரு வராது. குளித்து முடித்த பின் உடலைத் துடைத்துவிட்டு, வியர்க்குரு பவுடர், காலமின் லோஷன் அல்லது சந்தனத்தைப் பூசலாம்.

வேனல் கட்டிகள் : தோலின் வழியாக வெளியேற வேண்டிய உப்பு, யூரியா போன்றவை வெளியேற முடியாமல் வியர்க்குருவில் அழுக்குபோல் தங்கிவிடும். அப்போது அங்கு பாக்டீரியா தொற்றிக் கொள்ளும். உடனே அந்த இடம் வீங்கிப் புண்ணாகும். இதுதான் வேனல்கட்டி. இதற்கு நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள், வலி நிவாரணி மாத்திரைகள், வெளிப்பூச்சுக் களிம்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். வேனல்கட்டி வருவதைத் தடுக்க, வெயிலில் அலைவதைத் தவிர்க்க வேண்டும்.

சிறுநீர்க் கடுப்பு : கோடையில் சிறுநீர்க் கடுப்பு அதிகத் தொல்லை தரும். உட்கொள்ளும் தண்ணீரின் அளவு குறைந்தால் சிறுநீரின் அளவும் குறைந்துவிடும். இதனால் சிறுநீரின் மூலம் வெளியேற வேண்டிய உப்புகள், படிகங்களாக மாறி சிறுநீர்ப் பாதையில் படிந்துவிடும். இதனால் சாதாரணமாக காரத்தன்மையில் இருக்கும் சிறுநீர் அமிலத்தன்மைக்கு மாறிவிடும். இதன் விளைவால் சிறுநீர்க்கடுப்பு ஏற்படும். நிறையத் தண்ணீர் குடித்தால், இந்தப் பிரச்சினை சரியாகிவிடும். குறிப்பாக, ஒரு மணிநேரத்துக்கு ஒருமுறை, ஒரு தம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

டாக்டர் கு.கணேசன்

வெப்பத் தளர்ச்சி : வெயிலின் ஆதிக்கம் அதிகரிக்கும்போது, உடலின் வெப்பம் சிலருக்கு 106 டிகிரி அளவிற்கு மேல் தாண்டி விடும். அப்போது உடல் தளர்ச்சி அடையும். களைப்பு உண்டாகும். நிறைய வியர்க்கும். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கும். தலைவலி, வாந்தி, தலைச்சுற்றல், மயக்கம் போன்ற அறிகுறிகள் தோன்றும். அளவுக்கு மீறிய வெப்பத்தின் காரணமாக உடலின் உப்புகள் வெளியேறிவிடுவதால் இந்தத் தளர்ச்சி ஏற்படுகிறது.

வெப்ப மயக்கம் : நீண்ட நேரம் வெயிலில் வேலை செய்கிறவர்கள், சாலையில் நடந்து செல்கிறவர்கள்... போன்றோர் திடீரென மயக்கம் அடைவதுண்டு. வெயிலின் உக்கிரத்தினால், தோலிலுள்ள ரத்த நாளங்கள் அதீதமாக விரிவடைந்து இடுப்புக்குக் கீழ் ரத்தம் தேங்குவதற்கு வழி செய்து விடுகிறது; இதனால் இதயத்திற்கு ரத்தம் வருவது குறைகிறது; ரத்த அழுத்தம் கீழிறங்குகிறது; மூளைக்குப் போதுமான ரத்தம் கிடைப்பதில்லை; உடனே தலைசுற்றல், மயக்கம் உண்டாகிறது.

உணவுகள்!

முதலுதவி : வெப்பமயக்கம் மற்றும் வெப்பத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவரை, உடனடியாகக் குளிர்ச்சியான இடத்தில் மின்விசிறிக்குக் கீழ் படுக்க வைக்க வேண்டும். ஆடைகளைத் தளர்த்தி, காற்று உடல் முழுவதும் படும்படிச் செய்யுங்கள். தண்ணீரில் நனைத்த துணியால் உடலைத் துடைக்கவும். இது மட்டும் போதாது. அவருக்கு குளுக்கோஸ் மற்றும் தாதுக்கள் அடங்கிய நீர் மருந்துகளை ஊசி வழியாகச் செலுத்த வேண்டியதும் முக்கியம். ஆகையால் மருத்துவ உதவி கிடைப்பதற்கும் வழி செய்வது அவசியம்!

தண்ணீர்! தண்ணீர்! : கோடை வெயிலை சமாளிக்கவும், வெப்ப நோய்கள் வராமல் தடுக்கவும் அதிகமாகத் தண்ணீர் குடியுங்கள். சாதாரணமாக தினமும் 2 லிட்டர் தண்ணீர் குடிப்பது வழக்கம்.



கோடையில் 3 லிருந்து 4 லிட்டர் வரை குடிக்க வேண்டும்.

பழச்சாறுகள் அவசியம் : வெயில் காலத்தில் காபி மற்றும் தேநீர் குடிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள். செயற்கை மென்பானங்களைக் குடிப்பதைவிட இளநீர், மோர், பதநீர், பழச்சாறுகள், லஸ்ஸி ஆகிய வற்றைப் பருகலாம். எலுமிச்சைச் சாறில் உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துச் சாப்பிடு வது நல்லது. தர்ப்பூசணி, நுங்கு, வெள்ளரி, கொய்யா, பப்பாளி, சாத்துக்குடி ஆரஞ்சு, திராட்சை, பலாப்பழம், அன்னாசி போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களையோ, பழச் சாறுகளையோ அடிக்கடிச் சாப்பிடலாம்.

ஆகாத உணவுகள் : கோடையில் முக்கியமாக காரம் மற்றும் மசாலா நிறைந்த உணவுகள், எண்ணெய்ப் பலகாரங்கள், பேக்கரிப் பண்டங்கள், அசைவ உணவுகள் ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ளுங்கள். இவை தண்ணீர்த் தாகத்தை அதிகப்படுத் தும். இட்லி, இடியாப்பம், தயிர்சாதம், மோர்சாதம், கம்பங்கூழ், வெங்காயப் பச்சடி, வெள்ளரி சாலட், பொன்னாங்கண் ணிக் கீரை, பீட்ரூட், காரட், முள்ளங்கி, பாகற்காய், தக்காளி ஆகியவை சிறந்த கோடை உணவுகள்.

வெயிலில் விளையாட வேண்டாம்: கூடியவரை இந்தக் கோடையில் பகல் 12 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்வதைத் தவிர்க்கவும். அவசியம் செல்ல வேண்டுமென்றால் குடை பிடித்துச் செல்லலாம். குழந்தைகள், சிறுவர், சிறுமியர் வெயிலில் அலைவது ஆபத்தை வரவழைக்கும். இவர்களுக்கு வெப்பத்தைத் தாங்கும் சக்தி குறைவு என்பதால், கடுமையான கோடை வெயி லில் சிறிது நேரம் விளையாடினால்கூட மயக்கம் வந்துவிடும்.

பருத்தி ஆடை நல்லது : வெயி லில் பயணிக்க வேண்டியதிருந்தால், கண்களுக்குச் சூரியக் கண்ணாடியை (sun glass) அணிந்து கொள்ளலாம். தளர்வான பருத்தி ஆடைகளை அணிய வேண்டியதும் முக்கியம். ●

வாழ்த்துகள்!



விடையைச் சொல்; பரிசை வெல் - 33ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1) கிளாடோபோரா, 2) அஸ்ட்ராலிஸ், 3) ஹிஸ்டமின், 4) ஸ்ரீசமர்த்த ராமதாஸ் சுவாமிகள், 5) ஆர்டிக்

பரிசு பெறுவோர் : 1) த.சுகன்யா, விருதுநகர், 2) உ.அன்வர் உசேன், மதுக்கூர், 3) எஸ்.ஆர். மரகதலக்ஷ்மி, சீர்காழி, 4)கி.அகிலா, பச்சூர், 5) எம்.வாசவி சரண்யா, திருக்கோவிலூர், 6) சி.அபிராமி, மதுரை, 7) எஸ்.மருதநாதன், திருத்துறைப்பூண்டி, 8) த.நந்தகுமார், ராசிபுரம் 9) எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி, 10) வி.தன்யா, கல்கத்தா

பாடம் புகட்டிய நரி!



● 'வெள்ளி நரி' படக்கதை, பேராசைப் டக்கூடாது என்கிற பாடம் புகட்டிய ருமையான கதை. - **ந.பிருந்தா, உ. ண் 1098, மயிலாடுதுறை** ● 'பற்களைப் ாதுகாக்கும் உணவுகள்' கட்டுரை, எப்படிப் ற்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிற சய்தியைத் தெளிவுபடுத்தியது. - **பி.சர் வஸ்வரன், உ. எண் 456, மதுரை** ● ரா ரெம்சென் 'சாக்ரின்' கண்டு டித்த விதம் வியப்பை ஏற்படுத் யது. தவறான ஒரு செயல்கூட, திய கண்டுபிடிப்புக்கு உதவும் - ர்ந்து கவனித்தால் என்று அறிவுறுத்தி து அறிவியல் கதை! - **எம்.மிருணா ளினி, உ. எண் 1567, மதுரை** ● வெற் லையைப் பற்றிப் புதிதான பல செய்தி ளை அறிந்து கொள்ள முடிந்தது. அதுபோல, முத்து என்பது என்ன?' கட்டுரையும் சிறப்பு. **எம்.சிவரஞ்சனி, உ. எண் 169, ஸ்ரீமகாதே ருஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பலங்கைமான்** ● 'நான்கு சீடர்கள்' கதை ஆர்க்கி மிடிஸ் தத்துவம் கலந்த கதையாகிக் கலகலப்பூட்டியது. **ஆர்.ஏ.விஜய்சாய்பாலா, திருச்செந்தூர்** ● புது வைத்தியர் என்ற தலைப்பில் வந்த புதிர் மிக அருமை. சிரிப்பலையின் வாசகங்கள் அனைத்தும் என்னைக் குலுங்கச் சிரிக்க வைத்தன. - **ஏ.சுந்தரராஜன், உ. எண் 1158, திருக்கழுக்குன்றம்** ● கவர் ஸ்டோரியின் மூலமாக யோகா செய்வதால் ஏற்படும் நன்மையை அறிந்து கொண்டோம். - **ஆர்.அம்பிகா, மதுரை** ● உலகோர் பசியாற்றும் உழவனின் சிறப்பைப் புலப்படுத்துகின்ற கே.பி.பத்மநாபனின் நெடுங்கவிதை, 'ஏர் பின்னது உலகம்', உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' எனச் சிறப்பிக்கும் வள்ளுவ வாசகத்தை உள்ளடக்கிச் சிறந்துள்ளது. - **ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி** ● பலே, திடீரென்று 'விடையைச் சொல் பரிசை வெல்' என்ற போட்டியை மாற்றி, சூப்பர் போட்டியாக 'பெயரைச் சொல்: பரிசை வெல்' என்ற போட்டியாக ஆரம்பித்துவிட்டீர்கள். - **வருண் ஸ்ரீவத்ஸன், சென்னை** ● கோகுவின் தலையங்க அறிவுரை தலையாய அறவுரை. வார்த்தை விளையாட்டு ஐடியா எங்கள் வீட்டில் ஜாலியாக ஒர்க் அவுட்டானது. - **ஆர்.ஜி.ஜே.ஜெய்ஹரிதா, திருவொற்றியூர்** ● போட்டி முடிவுப் பகுதியில், அனாதை இல்லத்தில் மாணவர்கள் உடைகளைக் கொடுத்தவுடன், அங்கிருந்தவர்கள் இவர்கள் நன்றாக இருக்க இறைவன் அருள் புரியட்டும் என்று பிரார்த்தனை செய்ததைப் படித்தவுடன் மனம் உருகியது. நாமும் இதேபோல் மற்றவர்கள் வாழ்த்தும்படி நடக்க வேண்டும் என்று புரிந்து கொண்டேன். - **எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை** ●

பெயரைச் சொல்; பரிசை வெல் - 2







1. ______________ 2. ______________ 3. ______________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி: ....

....

வீட்டு முகவரி : ....

....பின்கோடு ....

போட்டி
பரிசு
ரூ.1000/-



கொடுக்கப்பட்டுள்ள படங்களை கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில் பத்து பேருக்கு குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.5.2010

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1601


1602


1603


1604


1605


1606


1607


1608


1609


1610


1611


1612


1613


1614


1615


1616



1617


1618


1619


1620


1621


1622


1623


1624


1625

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

